வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 16.08.2022 செவ்வாய்க்கிழமை | இதழ் : 252 | பக்கங்கள் : 16

# இலங்கையும் இந்தியாவும் நாணயத்தின் இரு பக்கங்கள்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

### பிராந்தியம், உலகுக்குப் பொதுவான பிரச்னைகளை இனங்கண்டு தீர்க்கவும் செயல்படுகிறோம் என்கிறார்!



கொழும்பு, ஓகஸ்ட் 16

**"இலங்கையும் இந்தியாவும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை. இரண்டும் ஒரே குணாம்சங்களைக் கொண்ட நாடுகளாகும். எனவே, இந்த இரு நாடுகளுக்கும் தனியான பயணம் கிடையாது",**
**- இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.**

அத்துடன், இந்திய - இலங்கை உறவுகளுக்கு மாத்திரமின்றி பிராந்தியத்துக்கும் உலகுக்கும் பொதுவான பல பிரச்னைகளை நாம் இனங்கண்டுள்ளோம். அவற்றைத் தீர்ப்பதற்கு துரிதமாக செயல்பட்டு வருகின்றோம் - என்றும் கூறினார்.

இந்திய அரசாங்கம் வழங்கிய டொனியர் 228 முதலாவது கடல்சார் ரோந்து விமானத்தை விமானப்படைக்கு உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு நேற்று கட்டுநாயக்க விமானப்படைத் தளத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில், இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே மற்றும் இலங்கை, இந்தியாவின் படைத்துறை

15

## கொரோனாவுக்கு மூவர் உயிரிழப்பு

கொழும்பு, ஓக. 16

கொரோனா தொற்றால் நேற்று முன்தினம் 3 பேர் உயிரிழந்தனர். இதேநேரம், நேற்று 129 பேர் புதிய தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவும், அரசாங்க தகவல் திணைக்களமும் இந்தத் தகவல்களைத் தெரிவித்துள்ளன.

நாட்டில் கொரோனா தொற்றால் நேற்றுமுன்தினம் மூவர் உயிரிழந்தனர். இதில், 30 வயதுக்கு மேற்பட்ட இரு பெண்களும், ஓர் ஆணும் அடங்குவர்.

இந்த மரணங்களுடன், நாட்டின் தொற்று இறப்பு எண்ணிக்கை 16 ஆயிரத்து 224 ஆக உயர்ந்துள்ளது.

தவிர, புதிய

15

## அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு இன்று வருகின்றது சீனக் கப்பல்!

### நேற்று இலங்கை எல்லைக்குள் பிரவேசித்தது

கொழும்பு, ஓக. 16

சர்ச்சையை ஏற்படுத்திய சீனாவின் யுவான் வாங் - 5 கப்பல் நேற்று இலங்கை கடல் எல்லைக்குள் பிரவேசித்தது. இந்தக் கப்பல் இன்று காலை 7.30 மணிக்கு அம்பாந்தோட்டை துறைமுகத்தை சென்றடையும் என்று தெரியவருகின்றது.

இன்றைய தினம் அம்பாந்தோட்டையை அடையும் யுவான் வாங் - 5 கப்பல் 7 நாட்களுக்கு துறைமுகத்தில் தரித்து நிற்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யுவான் வாங் - 5 கப்பல் இலங்கைக்கு

15



## 75ஆவது இந்திய சுதந்திர தினம் யாழ்ப்பாணத்தில் கொண்டாட்டம்!

யாழ்ப்பாணம், ஓக. 16

இந்தியாவின் 75ஆவது சுதந்திர தினமான நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத்திலும் கொண்டாடப்பட்டது.

யாழ்ப்பாணம் மருதடி வீதியில் அமைந்துள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் இடம்பெற்ற சுதந்திர தின நிகழ்வில், இந்திய தேசியக் கொடியை துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து, இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு வெளியிட்ட சுதந்திர தின வாழ்த்துச் செய்தியை துணைத் தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெய பாஸ்கரன்

15

## வடமராட்சியில் வாள்வெட்டு!

வடமராட்சி, ஓக. 16

பருத்தித்துறை நகரில் தையலகம் ஒன்றுக்குள் முகமூடிகளுடன் நுழைந்தவர்கள் அதனை அடித்து நொறுக்கியதுடன், உரிமையாளரையும் வாளால் வெட்டிக் காயப்படுத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றிரவு 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. மின்சாரம் தடைப்பட்டிருந்த நேரத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், பருத்தித்துறை ஓடக்கரையை சேர்ந்த ச. பாலகுமார் (வயது- 44) என்பவர் படுகாயமடைந்து பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

15

## தமிழில் தேசிய கீதம் அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஓக. 16

எதிர்காலத்தில் சுதந்திர தின நிகழ்வுகளில் தமிழில் தேசிய கீதம் பாடப்படும் நடைமுறையைப் பின்பற்ற அமைச்சரவை ஏகமனதாக அங்கீகரித்துள்ளது என்று கடற்றொழில் அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை கூட்டத்திலேயே இந்த அங்கீகாரம் அளிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

மேலும், "நல்லாட்சி காலத்தில் தற்போதைய ஜனாதிபதியின் நல்லெண்ண

15

## பதவிக்காலம் நிறைவடையும்வரை பாராளுமன்ற தேர்தல் இல்லை!

கொழும்பு, ஓக. 16

நாட்டில் தற்போதுள்ள 9 ஆவது பாராளுமன்றத்தின் பதவிக் காலம் நிறைவடையும் முன்பு, பொதுத்தேர்தலை நடத்தாதிருக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு தீர்மானித்துள்ளது என்று அரச உயர்வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆளுங்கட்சியின் பிரதான பங்காளிக் கட்சியான சிறீ லங்கா பொதுஜன முன்னணியால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரமே ஜனாதிபதி இந்த முடிவை எடுத்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

"தற்போதைய பாராளுமன்றம் மக்கள்

15

## புதிய தடை பட்டியலில் 3 அமைப்புகள் சேர்ப்பு?

கொழும்பு, ஓக. 16

மூன்று அமைப்புகள், 55 செயல்பாட்டாளர்களை இந்த ஆண்டுக்கான தடைப் பட்டியலில் அரசாங்கம் சேர்த்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்கம், உலகத் தமிழர் பேரவை உள்ளிட்ட 6 புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மற்றும் 317 செயல்பாட்டாளர்கள் மீதான தடையை கடந்த வாரம் நீக்கியது.

முன்னதாக கடந்த ஜூலை 28ஆம் திகதி வெளியான வர்த்தமானி அறிவித்தலின்படி உலகத் தமிழர் பேரவை உள்ளிட்ட 18 அமைப்புகள் தடைப் பட்டியலில் இருந்தன.

இதேபோல 577

15

## இப்படியும் நடக்கிறது...!

ஒரு வீட்டை வாடகைக்கு அல்லது நீண்டகால குத்தகைக்கு கொடுப்பதெனிலும் அதற்காக ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டியிருக்கும். அவ்வாறு ஒப்பந்தம் செய்துகொள்ளும் போது, வீட்டு சொந்தக்காரர். சில நிபந்தனைகளை விதிக்க லாம். வீட்டில் எத்தனைபேர் தங்கவேண்டும் என்றுகூட நிபந் தனை விதிக்கலாம்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு குத்தகைக்கு அதுவும் தொண்ணூற்றி ஒன்பது வருடங்களுக்கு கொடுக்கும் போது நிபந்தனைகள் விதிக்காமல் கொடுத்திருக்க முடியாது.

அந்த துறைமுகத்தை வர்த்தக கப்பல்களைத் தவிர, சீனா தனது பாதுகாப்பு தொடர்பான கப்பல்களை கொண்டுவருவ தெனில் அதற்கான அனுமதியை இலங்கையிடம் பெறவேண் டும் என்பது நிச்சயமாக அந்த குத்தகை ஒப்பந்தத்தில் இருந் திருக்கும்.

அதற்காக கப்பல்களே வரக்கூடாது என்று நிபந்தனை விதித்திருக்க முடியாது. துறைமுகம் ஒன்றை குத்தகைக்கு எடுப்பவர், அந்த துறைமுகத்துக்கு வந்துபோகின்ற வர்த்தக கப்பல்களின் வருமானத்திலேயே அதனை நிர்வகிக்கலாம். அதுவும் இலாபகரமாக இயங்கினால் மாத்திரமே அதனைத் தொடந்து நிர்வகிக்கலாம்.

நட்டத்தில் ஒரு நிறுவனம் தொடர்ந்து நடந்துகொண்டி ருந்தால் ஆகக்கூடியது, அதனை தனது தனிப்பட்ட தேவைக ளுக்காவது பயன்படுத்த முடியவில்லை என்றால், அதனை குத்தகைக்கு எடுத்தவர் தொடர்ந்து நட்டமடைந்து கொண்டி ருக்கமாட்டார். இது சாதாரணமாக எவருக்கும் புரிந்துகொள் ளக்கூடியதுதான்.

இப்போது தனது சர்ச்சைக்குரிய அந்த கப்பலை அம்பாந் தோட்டை துறைமுகத்துக்கு வருவதற்கு சீனா முறையான அனுமதி பெற்றுள்ள விபரம் வெளிவந்திருக்கின்றது.

அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஆளும்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்திருந்தமை ஞாபகமி ருக்கலாம். அந்த கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்களை கொழும்பு சிங்கள வார இதழ் ஒன்று வெளியிட்டுள்ளது.

சீனாவின் கப்பலால் இந்தியா தரும் அழுத்தங்களுக்கு நாம் அஞ்சக்கூடாது என்று சரத் வீரசேகர தெரிவித்தாரெனவும், அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பாக சுரேன் ராகவன் தெரிவித்த கருத்துக்களால் மகிந்த ராஜபக்ஷ கலங்கினா ரென்றும் அந்த செய்தியில் விபரிக்கப்பட்டுள்ளது.

கூட்டத்தின் தொடக்கத்தில் இது குறித்து ரணிலிடம் கேள்வி எழுப்பிய, சரத் வீரசேகர, சீனக் கப்பல் இலங்கை வர அனுமதி வழங்க வேண்டும் எனவும், இந்தியாவின் எதிர்ப்புக்கு அஞ்சி அனுமதி மறுக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் தெரிவித்தாராம்.

“எண்பத்தியேழில் இந்தியா எமக்கு என்ன செய்தது என்பது எங்களுக்கு நினைவிருக்கின்றது. இந்திய இராணுவத்தை அனுப்பினார்கள். யாழ்ப்பாண மக்களுக்கு வான்வெளி ஊடாக உணவுப் பொதிகளை இறக்கினார்கள். இதன்மூலம் இந்தியா எதனை வேண்டுமானாலும் செய்ய அனுமதிக்க முடியாது. சீனக் கப்பலை உள்ளே அனுமதிக்க வேண்டும். அன்று முதல் சீனா நம்முடன் இருந்து வருகின்றது” என்று சரத் வீரசேகர கூறியபோது, ரணில் சற்று அதிருப்தியுடன் பதிலளித்ததை காணக்கூடியதாக இருந்ததாம்.

தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன், அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவுக்கு சொந்த மானது என்பதால், சீனா தனது கப்பல்களை எந்த நேரத்திலும் அதற்கு கொண்டு வரலாம்” என்றும் கூறினார். ஆனால், ராகவனின் இந்த விசித்திரக் கதையால் உடனடியாக கலங்கிய முன்னாள் ஜனாதிபதி மகிந்த, அது முற்றிலும் தவறு எனத் தெரிவித்துள்ளார்.

“இல்லை, இல்லை... அம்பாந்தோட்டை துறைமுகம் சீனா வுக்கு வழங்கப்படவில்லை. இது சீனாவுக்கு குத்தகைக்கு மட் டுமே விடப்பட்டுள்ளது. அம்பாந்தோட்டைக்கு எப்போது வேண்டுமானாலும் கப்பல்களை கொண்டு வர முடியாது” என்று மகிந்த கூறியபோது, ரணிலும் அதற்கு ஒப்புதல் அளித் தாராம்.

அதுவல்ல நாம் இங்கே கவனிக்கவேண்டியது. இந்த சர்ச்சைக்குரிய கப்பல் இலங்கை வருவதற்கு எப்போது அனுமதி வாங்கப்பட்டது என்ற விபரமும் இந்தக் கூட்டத்தில் வெளிச் சத்துக்கு வந்துள்ளது.

ஜூலை பன்னிரண்டாம் திகதி கப்பலுக்கு அனுமதி கோரப் பட்டதாகவும், ஜூலை பதினான்காம் திகதி அனுமதி வழங்கப்பட்டதாகவும் வெளிவவிகார அமைச்சர் அலி சப்ரி இங்கு தெரிவித்திருக்கிறார். அதுமாத்திரமன்றி, வெளியுறவுத் துறை அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ்மட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அலி சப்ரி தெரிவித்தாராம்.

ஆக, ஜூலை ஒன்பதாம் திகதி அப்போதைய ஜனாதிபதி நாட்டைவிட்டு ஓடி தலைமறைவாக இருக்க, நாடு கடும் அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருக்க, அந்த நேரம் பார்த்து சீன, தனது கப்பலுக்கு அனுமதி கோரியிருக்கின்றது. இந்த அமர்க்களத்திற்கு மத்தியிலும் இரண்டு நாட்களில் நமது அதிகாரிகள் எவ்வளவு வேகமாக இயங்கி, அனுமதியைக் கொடுத்திருக்கிறார்கள்!

அரசன் மாத்திரமல்ல, அவரின் கீழே இருக்கும் பணியாளர்களும் அிவேகமானவர்கள்தான் என்பதை சீனா நன்றாகத்தான் அறிந்து வைத்திருக்கின்றது.!

- ஊர்க்குருவி.

## நுரைச்சோலை அனல் மின் நிலையம் வழமைக்கு திரும்ப இரு வாரங்களாகும்!

கொழும்பு, ஒக. 16

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் பழுதடைந்துள்ள முதலாவது மின் பிறப்பாக்கி யின் திருத்தப் பணிகள் நிறை வடைவதற்கு சுமார் 14 - 16 நாட்கள் ஆகும் என தெரிவிக் கப்பட்டுள்ளது.

இதனால், மின்வெட்டு நேரத்தை அதிகரிக்க வேண்டி யுள்ளதாக பொதுப் பயன்பாடு கள் ஆணைக்குழு தெரிவித் துள்ளது.

இதனிடையே, நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத் தில் உள்ள இரண்டாவது மின் உற்பத்தி இயந்திரம் பராமரிப்பு பணிகளுக்காக நிறுத்தப்பட் டுள்ளது. மூன்றாவது மின் உற்பத்தி இயந்திரம் தொடர்ந்தும் இயங்கி வருகி றது என்று மின்சக்தி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும், நுரைச்சோலையி லுள்ள மூன்று மின் உற்பத்தி இயந்திரங்களில் இரண்டு மின் உற்பத்தி இயந்திரங்கள் மின் உற்பத்திக்கு பயன்படுத்தப்படா ததால் நாட்டின் மொத்த மின் உற்பத்தியில் 600 மெகா வோட்ஸ் மின்சார உற்பத்தி குறைவடைந்துள்ளது. இதன் படி, நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் மூன்றாவது அலகு மாத்திரமே தற்போது இயங்கி வருவதால், 300 மெகா வோட்ஸ் மின்சாரம் மட்டுமே தேசிய மின் தொகுப்பில் சேர்க் கப்படுகிறது என்றும் தெரிவிக் கப்பட்டது. (ஐ)

## இன்று முதல் 3 மணிநேர மின்வெட்டு நடைமுறை!

கொழும்பு, ஒக. 16

நாட்டில் மின்வெட்டு நேரம் 3 மணித்தியாலமாக இன்று செவ் வாய்க்கிழமை முதல் நடைமுறைக்கு வருகிறது.

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் முதலாவது, இரண் டாவது மின் உற்பத்தி தொகுதிகள் செயலிழந்தமையாலேயே மின்வெட்டு நேரம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை முதல் நாடு முழுவதும் சுழற்சி முறையில் 3 மணி நேர மின்வெட்டு நடைமுறையாகும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## நீர்வேலி கந்த சுவாமி ஆலயத்தில் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஒக. 16

நீர்வேலி அருள்மிகு கந்த சுவாமி ஆலயத்தில் நடத்தப்ப டும் வாராந்த சிறப்புச் சொற் பொழிவு கோயிலின் சண்முக விலாச மண்டபத்தில் எதிர் வரும் 19ஆம் திகதி வெள் ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறும்.

சமயஜோதி கதிர்காமன் நிஜ லிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்த நிகழ்வில் தலைமை உரையை பரிபாலன சபைத் தலைவர் த. சோதிலிங் கம் ஆற்றுவார்.

சிறப்புச் சொற்பொழிவை சைவப்புலவர் ச.முகுந்தன் “கார்த்திகையும் கார்த்தி கேய னும்“ என்ற தலைப்பில் ஆற்று வார். (ஐ)

## தெய்வீக திருக்கூட்ட தொடரில் இன்று!

நல்லூர், ஒக. 16

நல்லைக் கந்தன் ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் சிறப்பு தெய்வீகத் திருக்கூட்டத் தொடர் நடக்கிறது.

இந்து சமய, கலாசார அலு வல்கள் திணைக்களத்தின் ஏற் பாடு அகில இலங்கை இந்து மாமன்றத்தின் இணை அனு சரணையில் முன்னெடுக்கப் பட்டுவரும் இந்தக் கூட்டத் தொடரில் 15ஆம் நாள் நிகழ் வுகள் இன்று செவ்வாய்க் கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ளன.

இன்றைய நிகழ்வு, வண. ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவா மிகளும் அமெரிக்கா, ஹவாய் சைவ ஆதீனக் குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் சீடர், வண. ஆன்மிகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளும் திருமுன்னிலை வகிக்க, யாழ். பல்கலைக்கழக இந்துக் கற் கைகள் பீடத்தின் சைவ சித்தாந் தத்துறை, சிரேஷ்ட விரிவுரை யாளர் தி.செல்வமனோகரன் நிகழ்வுக்கு தலைமை தாங்குவார்.

இதில், பருத்தித்துறை, பிர தேச செயலர் பிரிவின் நெல் லண்டை அம்மன் அறநெறிப் பாடசாலையின் நிகழ்வு ஏற்பாட் டில், அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ் வுகள் அரங்கேறவுள்ளன.

சிறப்பு நிகழ்வுகள் வரிசை யில், ‘சித்தாந்த வளர்ச்சிக்கு நாவ லர் பெருமானின் பங்க ளிப்பு’ என்னும் தலைப்பில் ஆன்மிக பிரசாரகர், ஆசிரியர் திருமதி சிவயோகவதனி லோகேஸ்வர னின் சிறப்புச் சொற்பொழிவும், திருமலை சாமி சர்மா ஸ்ரீ சந் திர மௌலீசர சர்மாவின் இசைக் கச்சேரி நிகழ்வும் இடம் பெறவுள்ளன. (ஐ)

## ஜனாதிபதியின் நல்லெண்ணத்தை உறவுகள் பயன்படுத்த வேண்டும்!

### அமைச்சர் டக்ளஸ் சொல்கிறார்

யாழ்ப்பாணம், ஒக. 16

புலம்பெயர் தமிழ் அமைப் புகள் மீதான ஜனாதிபதியின் தடை நீக்கத் தீர்மானத்தை நல் லெண்ண சமிக்ஞையாக புலம் பெயர் உறவுகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

புலம்பெயர் தமிழ் அமைப் புக்கள் மீதான தடையை நீக்கி யமைக்கு வரவேற்பு தெரிவித்து வெளியிட்ட செய்திக் குறிப்பில் அவர் மேலும் கூறியவை வரு மாறு,

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கான ஆதரவை எந்த விதமான சஞ்சலமும் இன்றி துணிச்சலாக வெளிப்படுத்திய ஈ.பி.டி.பி. கட்சி, தமிழ் மக்க ளின் எதிர்பார்ப்புக்களை நிறை வேற்றும் வகையில் சுமார் 10 அம்சக் கோரிக்கையை முன் வைத்திருந்தது.

அதில் ஒன்றாக புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் தடை நீக்கப்பட வேண்டும் என்பதும் உள்ளடக்கப்பட்டிருந்தது. தடை நீக்கப்பட்டுள்ள இந்தச் சந்தர்ப்பத்தை புலம்பெயர் உற வுகள் சரியான சந்தர்ப்பமாக பயன்படுத்தி, நாட்டில் வாழ்ந்து வருகின்ற தங்களு டைய உறவுகளின் பொருளா தார பலத்தை கட்டியெழுப்பு வதற்கு முன்வரவேண்டும்.

அத்துடன், ஏனைய கோரிக் கைகளும் முன்னுரிமை அடிப் படையிலாயினும் நிறைவேற் றப்படுவதுடன், தடைசெய்யப் பட்டுள்ள முஸ்லிம் அமைப்புக் கள் தொடர்பாகவும் ஆராய்ந்து நியாயமான நடவடிக்கை மேற் கொள்ளப்பட வேண்டும் - என் றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

## அவசரகால சட்டம் ஒக. 27உடன் தானாகவே செல்லுபடியற்றதாகும்!

கொழும்பு, ஒக. 16

எதிர்வரும் 27ஆம் திகதியு டன் நிறைவடையவுள்ள அவசர காலச் சட்டம் இனி நீடிக்கப் படாது என்ற நிலைமை காணப் படுகிறது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த மாதம் 27ஆம் திகதி பாராளுமன்றில் அவசரகாலச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்நிலையில், பாராளுமன்றம் எதிர்வரும் 29ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, ஒகஸ்ட் 27ஆம் திகதியுடன் நிறைவடை யும் அவசரகால சட்டத்தை நீடிக்க வேண்டுமெனில் மீண் டும் பாராளுமன்றின் ஒப்புத லைப் பெற வேண்டியது அவசி யமாகும். ஆனால், தற்போது 27ஆம் திகதி பாராளுமன்றம் கூடுவதற்கான சந்தர்ப்பம் இல்லை. எனவே, ஒகஸ்ட் 27ஆம் திகதிக்கு பிறகு இந்தச் சட்டம் தானாக இரத்தாகும் நிலைமை உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
16.08.2022 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், ஆடி 31

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 730 1370**

# தமிழ் கட்சிகளின் கடிதங்கள்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளான ரெலோ மற்றும் டி. பி. எல். எவ் (புளொட்) ஆகியவை உள்ளடங்கலாக, விக்னேஸ்வரன் தலைமையிலான கூட்டணியில் அங்கத்துவம் வகிக்கும் கட்சிகளும் இணைந்து, ஐந்து கட்சிகளாக, ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளருக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்திருக்கின்றனர். 46/1 பிரேரணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்களை அமுல்படுத்துவதற்கான கோரிக்கையுடன், தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்காக, சர்வதேச கண்காணிப்புடன் கூடிய பொதுசன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென்னும் கோரிக்கையும், குறித்த கடிதத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றது. ஐ. நா. பாதுகாப்பு பேரவை - வடகொரியாவைப் போன்று, இலங்கையை, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பரிந்துரைக்க வேண்டுமென்றும் கோரப்பட்டிருக்கின்றது. வடகொரியாவை இலங்கையுடன் ஒப்பிடுமளவுக்கு தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் சிந்தித்திருக்கின்றனர்.

இதற்கு முன்னரும் ஆறு கட்சிகள் என்னும் அடிப்படையில், இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு, 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு உதவி செய்யுமாறு கோரி, கடிதமொன்றை அனுப்பியிருந்தனர். அந்தக் கடிதத்துக்கு இந்தியாவின் பதில் என்ன என்பது இதுவரையில் தெரியவில்லை. இப்போது, தமிழ் அரசு கட்சியை வெளியில் விட்டுவிட்டு, பொதுசன வாக்கெடுப்புப் பற்றி பேசுகின்றனர். அரசியல் தீர்வுக்காக பொதுசன வாக்கெடுப்புகள் நடத்தப்படுவதில்லை. பொதுசன வாக்கெடுப்பு என்பது, அடிப்படையில் பிரிந்து சென்று தனியரசை நிறுவுவது தொடர்பான நிலைப்பாடாகும். இது போன்ற நிலைப்பாட்டையே, உருத்திரகுமாரன் தலைமையிலான நாடு கடந்த அரசாங்கமும் கோரி வருகின்றது.

ஒருபுறம் இந்தியாவிடம் 13ஆவது திருத்தச் சட்டத்தை அலமுல்படுத்துமாறு கோரும் இவர்கள், மறுபுறம் பொதுசன வாக்கெடுப்பைக் கோருவதானது, இவர்கள் எதற்குமே நேர்மை இல்லாதவர்கள் என்றவாறான பார்வையையே ஏற்படுத்தும். தேர்தல் அரசியல் போட்டியை கருத்தில் கொண்டே இவ்வாறான விடயங்கள் நோக்கப்படும். மேலும் ஒரு பொதுசன வாக்கெடுப்பை நடத்துவதற்கான அக மற்றும் புறச் சூழல், தமிழ் மக்களுக்கு சாதகமாக இல்லை. அத்துடன், அவ்வாறான பொதுசன வாக்கெடுப்பை இந்த இலங்கைத் தீவில் நடத்துமளவுக்கு, இலங்கையின் உள்ளக அரசியல் நிலைமைகளும் மோசமாக இல்லை. அதேவேளை, பிராந்திய ரீதியான சாதகமான சூழலும் இல்லை. தவிர, வடக்கு - கிழக்கில் வாழ்ந்துவரும் தமிழ் மக்கள் மத்தியிலும் அதற்கான ஆதரவைப் பெற முடியாது. அதற்கு மக்கள் தயார்படுத்தப்படவில்லை. சிங்கள கட்சிகளிலிருந்தும் தமிழ் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுகின்றனர். இதனை இதுவரையில் தமிழ்த் தேசியக் கட்சிகளால் ஒற்றுமையுடன் எதிர்கொள்ள முடியவில்லை. இந்த நிலையில் எதற்காக இவ்வாறானதொரு கோரிக்கை முன்வைக்கப்பட வேண்டும்? இவ்வாறான கோரிக்கைகள், மறுபுறமாக, சிங்கள ஆளும் வர்க்கம் அரசியல் தீர்வைத் தட்டிக் கழிக்கவே பயன்படும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளில் பிரதான கட்சியான, இலங்கை தமிழ் அரசுக் கட்சி இதில் பங்குகொள்ளவில்லை. முடிந்த வரையில் அனைத்து தரப்புக்களும் ஒன்றாக நிற்பதற்கான புள்ளிகளையே கண்டுபிடிக்க வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தொடர்வதில்லை என்றால், ரெலோவும் புளொட்டும் இவ்வாறான முடிவுகளை எடுக்க முடியும். இவ்வாறான முடிவுகளை எடுத்துவிட்டு பின்னர், தேர்தல் என்றவுடன், தமிழ் அரசுக் கட்சியின் சின்னத்தில் போட்டியிடுவதானது அடிப்படையிலேயே இவர்கள் முன்வைக்கும் கோரிக்கைகள் அனைத்தையும் மலினப்படுத்தவே பயன்படும். இறுதியில் தமிழர்களின் கோரிக்கை எது என்பதையே மற்றவர்கள் தெரிந்து கொள்ள முடியாத நிலைமையே ஏற்படும். இதுவரையில் இதுதான் நடந்திருக்கின்றது. சுமந்திரனை எதிர்க்கின்றோம் என்னும் அடிப்படையில் முன்னெடுக்கப்படும் விடயங்கள், தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாடுகளை பரிகசிப்புக்கு உள்ளாக்கிவிடக் கூடாது.

தமிழ் மக்கள் விடயத்தில் பாதகமான அரசியல் போக்கை கொண்டிருந்தாலும் கூட, உலக தாராளவாத ஜனநாயக முறைமைக்கு உட்பட்ட நாடாகவே, இலங்கை இருக்கின்றது. இலங்கையின் பலமும் இதுதான். இதுவரையான அழுத்தங்கள் பெரியளவில் வெற்றியை பெறமுடியாமல் இருப்பதற்கும் பின்னால் இந்த காரணம்தான் இருக்கின்றது. கோரிக்கைகளை முன்வைப்பது அவசியம். ஆனால், அவ்வாறான கோரிக்கைகள், வெறும் ஆசைகளாக இருந்துவிடக்கூடாது. மனித உரிமைகள் சார்ந்த கோரிக்கைகளை முன்வைக்கும் அதேவேளை, 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துமாறு கோரும் கோரிக்கையையே தமிழ் கட்சிகள் உறுதியாகவும் வலுவாகவும் முன்வைக்க வேண்டும். மாகாண சபை தேர்தலை விரைவாக நடத்துமாறு கோர வேண்டும்.

# சந்தர்ப்பங்களை நழுவவிடும் நிலைப்பாட்டில் மாற்றம் தேவை!

**அலசுவது இராஜதந்திரி**

*உலகத் தமிழர் பேரவை உட்பட ஆறு புலம்பெயர் அமைப்புகள் மற்றும் 316 தனிநபர்கள்மீதான தடையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் நீக்கியுள்ளது. இதனை உத்தியோகபூர்வமாக வர்த்தமானி அறிவித்தல் மூலமாக இலங்கை அரசு அறிவித்துள்ளது.*

*முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கமே புலம்பெயர்ந்த அமைப்புகள்மீதான தடைகளை அறிவித்திருந்தது. வடக்கு - கிழக்கு தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை சர்வதேச ரீதியாக ஒடுக்கும் விதத்திலேயே கோட்டாபய அரசு புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள்மீதான தடையைக் கொண்டு வந்திருந்தது.*

*இருந்தபோதிலும் ஜனநாயக ரீதியாக மேம்பட்ட நாடுகள் பலவற்றிலும் இயங்கிய இலங்கையின் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளுக்கு கோட்டாபய அரசு கொண்டு வந்திருந்த தடைகள் மூலமாக எந்தவொரு பாதிப்பும் சர்வதேச ரீதியாக ஏற்பட்டிருக்கவில்லை.*

*இந்நிலையில், தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசு சில புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள்மீதான தடையை நீக்கியுள்ளமையை எடுத்த எடுப்பிலேயே தவறாக விமர்சிக்காது சாதகமாகப் பரிசீலிப்பதே ஏற்புடையதாக இருக்கும்.*

*உலகத் தமிழர் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் தமது அமைப்பு உட்பட சில புலம்பெயர் தமிழர் அமைப்புகள் மீதான தடையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசு நீக்கியுள்ளமை குறித்து வெளியிட்டுள்ள அபிப்பிராயம் எவ்விதத்திலும் ஓர் அரசியல் சாணக்கியமுடையதாகக் காணப்படவில்லை. ஏனெனில், ஓர் அரசியல் ரீதியான அணுகுமுறைக்கு சந்தர்ப்பம் கிடைக்குமானால் அதுகுறித்து பரிசீலித்து களத்தில் இறங்கி தமிழர் அபிலாசைகள் குறித்த கருத்துக் கண்ணோட்டங்களை முன்வைப்பதே ஓர் ஆரோக்கியமான நடவடிக்கையாக இருக்க முடியும். இதைவிடுத்து கிடைக்கக் கூடிய சந்தர்ப்பங்களை தவறவிட முனைவது நல்ல முடிவுகளுக்கு வழியமைத்துவிடாது.*

*புலம்பெயர்ந்த சில தமிழ் அமைப்புகள் சர்வதேச ரீதியாக இலங்கைமீது வழங்கி வருகின்ற அழுத்தங்களில் இருந்து விடுபடவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவற்றின் மீதான தடையை நீக்கியுள்ளதோடு சமரச முயற்சிகளுக்கான ஒரு திறவுகோலாகவும் புலம்பெயர்ந்த அமைப்புகள் மீதான தடை நீக்கத்தை கருத முடியும். கடந்த காலங்களில் அரிய பல சமரச முயற்சிகள் முறிவடைந்து தோல்வி கண்டதோடு பாரிய பின்னடைவுகளை தமிழ் அரசியல் தரப்பு எதிர்நோக்கியமைக்கும் சந்தேகங்களும், நம்பிக்கையீனங்களுமே முக்கிய காரணங்களாகும்.*

*எனவே, கடந்த காலங்களில் விட்ட தவறுகளையே மீளவும் விடுவதற்கான சூழ்நிலையை உருவாக்குவது போன்றதாகவே உலக தமிழர் பேரவை பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் தெரிவித்த கருத்துக்கள் விளங்குகின்றன.*

*ரணில் விக்கிரமசிங்க தற்போது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக விளங்குகின்றார். இந்நிலையில், அவர் வழங்குகின்ற சந்தர்ப்பங்களை சரியாகப் பயன்படுத்தி தமிழர்களின் நியாயமான அரசியல் அபிலாசைகளை நிறைவேற்ற முடியும். இல்லையேல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அவர் முன்னெடுப்பதற்கு பின்வாங்குகின்ற விடயங்கள் தொடர்பாகவும் வடக்கு - கிழக்கு தமிழர்களுக்கு அவர் தர மறுக்கின்ற உரிமைகள் குறித்தும் சர்வதேச சமூகத்தின் முன்பாக புலம்பெயர்ந்த அமைப்புகளால் தகுந்த முறையில் வெளிப்படுத்த முடியும்.*

*இதைவிடுத்து, ஜெனிவாவில் அடுத்த மாதம் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரையும் சர்வதேச சமூகத்தையும் சமாளிக்கவே புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் மீதான தடையை நீக்கியுள்ளார் எனக்குறிப்பிடுவது எவ்விதத்திலும் குறிப்பிடத்தக்க கருத்தாக இருக்க முடியாது.*

*நிச்சயமாக ஜெனிவாவில் இடம்பெறவுள்ள 51ஆவது மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு மிகுந்த எச்சரிக்கையுடனேயே எதிர் கொள்ளும். அத்துடன், சர்வதேச ரீதியாக தாழ்வடைந்துள்ள இலங்கையின் மாண்பை மீளவும் நிலை நிறுத்த முன்வரும் என்றே எதிர்பார்க்க முடியும்.*

*இத்தகைய தருணத்தில் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் தம்மீதான தடைகள் நீக்கப்பட்டுள்ளதை ஒரு நல்ல சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி வடக்கு - கிழக்கு அரசியல் தீர்வு மற்றும் மனிதாபிமான பிரச்னைகள் குறித்து சர்வதேச சமூகத்தின் அனுசரணையோடு ஆக்கபூர்வமான அரசியல் நகர்வுகளை முன்னெடுக்கமுடியும்.*

*இதைவிடுத்து உலகத் தமிழர் பேரவை தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தாது அதன் பேச்சாளர் சுரேன் சுரேந்திரனைப்போல எதனையும் சந்தேகக்கண் கொண்டு பாரக்குமிடத்து "ஆறாப் புண்ணைக் காட்டி யாசகம்" பண்ணிக் கொண்டிருக்கும் நிலையிலேயே வடக்கு - கிழக்கு தமிழர் பிரச்னையும் தொடர்ந்து இருந்து வரும் என்றே கருத முடியும்.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஒகஸ்ட் - 16 செவ்வாய்க்கிழமை
சுபகிருது வருடம் - ஆடி 31
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : பஞ்சமி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**

செலவு செய்து செயலில் லாபம் காண்பீர்கள். கவனமுடன் செயல்படுவதால் நன்மையுண்டு.திடீர் பயணத்தால் அலைச்சல் ஏற்பட்டாலும் நன்மை அதிகரிக்கும். பணத்தைக் கையாளுவதில் கவனம் தேவை.

**இடபம்**

பணியிடத்தில் நீங்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பண வரவு உண்டாகும்.தொழிலில் பொருளாதார நிலை சீராகும். புதிய முயற்சியில் கவனம் தேவை. உங்கள் செல்வாக்கு உயரும்.

**மிதுனம்**

வேலைக்கான முயற்சி மேற்கொண்டு காத்திருப்பவர்களுக்கு எதிர்பார்த்த தகவல் வரும். நண்பர்களின் உதவியுடன் புதிய முயற்சி ஒன்றில் ஈடுபடுவீர்கள்.பொருளாதார நிலை உயரும்.

**கடகம்**

உங்களுடைய முயற்சி வெற்றியாகும்.உங்கள் திறமை வெளிப்படும். திட்டமிடும் செயலில் வெற்றி காண்பீர்கள். சங்கடங்களில் இருந்து விடுபடுவீர்கள். குரு அருளால் புதிய முயற்சி ஒன்று நிறைவேறும்.

**சிம்மம்**

மனம் தடுமாற்றம் அடையும். பகைவர்களின் கை மேலோங்கும். மேற்கொள்ளும் முயற்சிகளில் தடை உண்டாகும்.பயணத்தில் எச்சரிக்கை தேவை. வாகனத்திற்காக செலவு செய்ய வேண்டி இருக்கும்.

**கன்னி**

குடும்பத்தில் சுப நிகழ்ச்சி கூடி வரும். நீண்ட நாள் எண்ணம் நிறைவேறும்.தம்பதிகளுக்குள் ஏற்பட்ட பிரச்னை தீரும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். ஆதாயமான நாள்.

**துலாம்**

எதிர்ப்புகள் விலகும். உடல் நிலையில் ஏற்பட்ட சங்கடம் விலகி சுறு சுறுப்பாக செயல்படுவீர்கள். தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள் உங்கள் நீண்ட நாள் முயற்சியில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருட்சிகம்**

வேலை வாய்ப்பு குறித்த தகவல் வரும். திருமண வயதில் இருப்பவர்களுக்கு வரன் வரக்கூடும். பெற்றோரின் ஆதரவுடன் உங்கள் விருப்பம் நிறைவேறும். எண்ணியதை அடைவீர்கள்.

**தனுசு**

மனதில் இனம் புரியாத குழப்பம் உண்டாகும். யோசித்து செயல்பட வேண்டிய நாள். உறவினர்களிடம் ஏற்பட்ட பிரச்னை விலகும். நீங்கள் விரும்பியதை அடைவீர்கள்.அரசு வழியில் நெருக்கடி ஏற்படும்.

**மகரம்**

தைரியத்துடன் செயல்படுவீர்கள். நீண்ட நாள் முயற்சி ஒன்றில் வெற்றி அடைவீர்கள்.திட்டமிட்டு செயல்படுவீர்கள். பொது இடல்களில் உங்கள் மதிப்பு உயரும் நாள். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

**கும்பம்**

பண நெருக்கடிகளை சரி செய்வீர்கள். நினைத்ததை அடைவீர்கள். குடும்பத்தில் செல்வாக்கு உயரும். எதிர்பார்த்த வரு மானம் வந்து சேரும். பெற்றோரின் ஆரோக்யத்தில் கவனம் தேவை.

**மீனம்**

உங்கள் செயல்களில் தடுமாற்றம் உண்டாகும். எதிர்காலம் குறித்த சிந்தனை மேலோங்கும்.பணியில் கூடுதல் பொறுப்புகளை ஏற்க வேண்டியதாக இருக்கும். வேலை பளு அதிகரிக்கும். முயற்சியில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்க தாமதமாகும்.

# துணைக் கண்டத்தில் விடுதலைக்காக முதல் குரல் எழுப்பியது தமிழ் மண்தான்!

## தமிழ்நாடு முதலமைச்சர் பெருமிதம்

*சென்னை, ஓக. 16*

இந்திய துணை கண்டத்தில் விடுதலைக்காக முதலில் குரல் கொடுத்தது தமிழ்நாடுதான். அடிமைப்படுத்துதல் என்று தொடங்கியதோ அன்றைய நாளே விடுதலை குரலை எழுப்பிய மண், தமிழ் மண் என்று கூறியிருக்கிறார் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின்.

இந்தியாவின் 75ஆவது சுதந்திர தினமான நேற்று தலைமை செயலகத்தில் தேசிய கொடி யேற்றி உரையாற்றினார் தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின். முதலமைச்சரின் உரையின் முக்கிய அம்சங்கள் வருமாறு,

இந்திய துணை கண்டத்தில் விடுதலைக்காக முதலில் குரல் கொடுத்தது தமிழ்நாடுதான். அடிமைப்படுத்துதல் என்று தொடங்கியதோ அன்றைய நாளே விடுதலை குரலை எழுப்பிய மண், தமிழ் மண். உலக விளையாட்டுப் போட்டிகள் நடத்துவது முதல், ஒரேயோர் இளைஞர்கூட போதைப் பொருளால் பாதிக்கப்படகூடாது என்பது வரையிலான முயற்சிகளில் அரசு ஈடுபட்டு வருகிறது.

இந்திய மக்கள் அனைவரும் வேற்றுமைகளை மறந்து ஒருதாய் மக்களாக உணர்ந்து பாடுபட்டதால்தான் இந்த சுதந்திரம் கிடைத்துள்ளது. ஒற்றுமையால் கிடைத்த சுதந்திரத்தை அதே ஒற்றுமையால்தான் காக்க முடியும்.

தேசிய கொடியின் நிறம் மூன்றாக இருந்தாலும் மூன்றும் ஒரே அளவோடுதான் ஒன்றி



ணைந்து இருக்கின் றன. வெளிப்புற சக்திகளின் தாக்குதலை வெல்ல வேண்டுமானால் உள்புற ஒற்றுமை என்பது அவசியம். இதுதான் உயிரை கொடுத்து இந்திய விடுதலைக்காக பாடுபட்ட உத்தமர்களுக்கு நாம் கொடுக்கும் உண்மையான அஞ்சலி.

அனைத்து துறைகளிலும் தன்னிறைவு பெற்ற மாநிலங்களின் துணையோடு ஒன்றிய இந்தியாவை வலுப்படுத்துவோம். வேற்றுமையில் ஒற்றுமை காண்போம்.

தொழில் வளர்ச்சி, சமூக மாற்றம், கல்வி மேம்பாடு ஆகிய அனைத்தும் ஒரே நேரத்தில் நடக்க வேண்டும். வளர்ச்சி என்பது சமூக வளர்ச்சியாக இருக்க வேண்டும். கடந்த ஓர் ஆண்டு காலத்தில் தமிழகம் பல்துறை வளர்ச்சி பெற்றுள்ளது. வேளாண்மைத் துறைக்கு கொடுத்த முக்கியத்துவத்தின் மூலமாக பாசன பரப்பு அதிகரித்துள்ளது - என்றார். (ஐ)

# முதலமைச்சரின் நிவாரண நிதியத்துக்கு விருது பணத்தை அளித்தார் நல்லகண்ணு!

*சென்னை, ஓக. 16*

விருதுக்கான பத்து இலட்சம் (இந்திய) ரூபாயுடன் தனது சொந்த நிதி ரூ. 5 ஆயிரம் சேர்த்து 10 இலட்சத்து 5 ஆயிரத்தை முதலமைச்சர் நிவராண நிதிக்கு வழங்கினார் "தகைசால் தமிழர்" நல்லகண்ணு



தமிழ்நாட்டுக்கும், தமிழினத்தின் வளர்ச்சிக்கும் மாபெரும் பங்காற்றியவர்களைப் பெருமைப்படுத்தும் வகையில் "தகைசால் தமிழர்" என்ற பெயரில் புதிய விருது 2021ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

இதன்படி இந்த ஆண்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஆர். நல்லகண்ணுவுக்கு "தகைசால் தமிழர் விருது" வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இதன்படி நேற்று நடைபெற்ற சுதந்திர தின விழாவில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் "தகைசால் தமிழர்" விருதை ஆர். நல்லகண்ணுவுக்கு வழங்கினார்.

மேலும் இந்த விருதுக்கான பத்து லட்சம் ரூபாய்க்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழ் ஆகியவற்றை தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் நல்லகன்னுவுக்கு வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து பத்து லட்சம் ரூபாயுடன் தனது சொந்த நிதி ரூ.5 ஆயிரம் சேர்த்து 10 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாயை முதலமைச்சர் நிவாரண நிதிக்கு முதல்வரிடம் வழங்கினார் நல்லகண்ணு. (ஐ)

# ஒரே நாடு என்ற எண்ணமே தவறு

## ப. சிதம்பரம்

*சென்னை, ஓக. 16*

இது ஒரே நாடு என்ற எண்ணமே தவறான எண்ணம். இது ஒரு நாடுதான், இல்லை என்று சொல்ல வில்லை. ஆனால் ஒரு நாட்டுக்குள் பல மாநிலங்கள் இருக்கின்றன, பல மொழிகள் இருக்கின்றன, பல கலாசாரங்கள் இருக்கின்றன, பல வரலாறுகள் இருக்கின்றன, பல பழக்கவழக்கங்கள் இருக்கின்றன - என்று காங்கிரஸ் கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் ப. சிதம்பரம் கூறியுள்ளார்.



ஒரு மாநிலம் தன்னுடைய நிதியில் இருந்து தன்னுடைய மாநில மக்களுக்காக தன்னுடைய பொறுப்பில் கல்லூரி நிறுவினால், அதில் எந்த மாணவர்களை சேர்ப்பது என்று அந்த மாநிலத்திற்கு முடிவு எடுப்பதற்கு அதிகாரம் கிடையாதா? இது என்ன வேடிக்கை? எந்த நாட்டில் இதுபோன்ற சமஷ்டி முறை நிலவுகிறது? சும்மா பொம்மை அரசாக மாநில அரசுகள் இருக்கும், மத்திய அரசுதான் எல்லா முடிவும் எடுக்கும் என்றால்... என்ன சமஷ்டி அரசு முறை?

எதற்காக மொழி வாரியாக மாநிலங்கள் என்று நம்முடைய மூத்த தலைவர்கள் அன்று பிரித்தார்கள்? அந்தந்த மாநிலத்தின் மக்கள் அவர்கள் பல பொருள்களில் சுயாட்சி பெற்ற அமைப்பாக சுயமாக சிந்தித்து சுயமாக முடிவு எடுக்கக்கூடிய அமைப்பாக மாநில அரசுகள் இருக்க வேண்டும் என்ற நோக்கத் தில்தான் மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப் பட்டன. அதை எல்லாம் கெடுப்பதற்கு - அழிப்பதற்குத்தான் இந்த ஒரு நாடு ஒரே... என்ற நிலைப்பாடு - என்றும் கூறினார்.







# மடு மாதா ஆவணி பெருவிழா நேற்று சிறப்புற இடம்பெற்றது!

**மன்னார், ஓக. 16**

**மன்னார் மருதமடு அன்னையின் ஆவணி மாத பெருவிழா நேற்று திங்கட்கிழமை காலை சிறப்பாக இடம்பெற்றது.**



காலை 6.15 மணியளவில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில், அநுராதபுரம் மறைமாவட்ட ஆயர் நோபேட் அன்ராடி ஆண்டகை, கொழும்பு உயர் மறை மாவட்டத்தின் துணை ஆயர் அன்ரன் ரஞ்சித் பிள்ளைநாயகம் ஆண்டகை ஆகியோர் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர்.

இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் இலட்சக்கணக்கான மக்கள் அன்னையின் ஆசீர்வாதத்தை வேண்டி மடு திருத்தலத்துக்கு வருகை தந்தனர்.

திருவிழா திருப்பலியை தொடர்ந்து மடு அன்னையின் திருச்சொரூப பவனி இடம்பெற்றதோடு மடு அன்னையின் ஆசி பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்த திருவிழா திருப்பலியில் மடு திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார், மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் பி.கிறிஸ்து நாயகம் அடிகளார், அருட்தந்தையர்கள், அருட் சகோதரிகள், அகில இலங்கை கிறிஸ்தவ ஒன்றியத்தின் ஸ்தாபகர் வண. பிதா அருட்கலாநிதி எஸ். சந்துரு பெர்னாண்டோ, அரசியல் பிரதிநிதிகள், திணைக்கள தலைவர்கள், பொதுமக்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றனர். (ஐ)

## வன்னேரியில் யானை தொல்லை; முன்னதாகவே அறுவடை ஆரம்பம்!

கிளிநொச்சி, ஓக. 16

வன்னேரிக்குளம் கிராமத்தில் யானைகளின் தொல்லையால் சிறுபோக அறுவடையை விவசாயிகள் விரைவாக மேற்கொண்டு வருகின்றனர்.

வன்னேரிக்குளம் கிராமத்தில் இரு பிரிவுகளாக சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் முதலாம் கட்ட சிறுபோக அறுவடையை விவசாயிகள் விரைவாக மேற்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. சிறுபோக வயல் நிலங்களுக்குள் யானைகள் புகுந்து பயிர் அழிவுகளை ஏற்படுத் துவதாலேயே விரைவாக அறுவடையை மேற்கொள்ள வேண்டிய நிலையில் விவசாயிகள் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

1953ஆம் ஆண்டு தொடக்கம் கிளிநொச்சி மாவட்டத்தில் யானைகளின் தொல்லை கூடுதலாக காணப்படுகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தின் தென்னியங்குளம் போன்ற கிராமங்களில் யானை வேலிகள் அமைக்கப்பட்டமையால் வன்னேரிக்குளம் கிராமத்திற்குள் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படாத சந்தர்ப்பத்திலேயே கிராமத்தின் நடுப்பகுதி வரை வருகை தரும் யானைகள் தென்னை, பலா, வாழை போன்ற பயன்தரு மரங்களை அழித்து வருகின்றன.

இந்நிலையில், யானைகளின் வருகையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வன்னேரிக்குளம் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஐ)

## சிலிண்டரை திருடியவரும் அதை வாங்கியவரும் கைது

யாழ்ப்பாணம், ஓக. 16

எரிவாயு சிலிண்டரை திருடிய சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன், அதனை அவரிடம் வாங்கிய கடை உரிமையாளரும் அச்சுவேலி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் புத்தூர் வடக்கு மந்திரிமனை பகுதி சேர்ந்த 26 வயதுடைய நபர் என தெரிவிக்கப்படுகிறது.

களவாடிய சிலிண்டரை புத்தூரில் உணவகம் ஒன்றை நடத்தி வரும் கடை உரிமையாளர் ஒருவர் வாங்கியுள்ளார். இதையடுத்து, திருட்டுப் பொருளை வாங்கிய குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டார்.

அச்சுவேலி பொலிஸ் பிரிவில் அண்மைநாட்களாக வெற்று எரிவாயு சிலிண்டர்கள் திருடப்பட்டமை தொடர்பில் பல முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணைகளிலேயே இந்தக் கைதுகள் இடம்பெற்றுள்ளன. கைதான இருவரையும் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

## பெருமளவு எரிபொருள்கள் யாழ்ப்பாணத்தில் தேக்கம்!

### இலாபம் குறைவதாக விற்பனையாளர்கள் கவலை

யாழ்ப்பாணம், ஓக. 16

யாழ்ப்பாணத்தில் கடந்த வாரங்களில் பெற்றோலுக்காக நீண்ட வரிசைகள் காணப்பட்ட நிலையில், தற்போது எரிபொருள்கள் விற்பனையின்றி தேங்கியுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது 'கியூ. ஆர்.' முறைமையில் பெற்றோல் விநியோகம் மேற்கொள்ளப்படும் நிலையில், பெற்றோலை அளவுக்கு அதிகமாகக் கொள்வனவு செய்வது தடுக்கப்பட்டுள்ளது. இதனால் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோலை அனைவரும் தடையின்றிப் பெறக்கூடிய நிலைமை உருவாகியுள்ளது.

இந்த நிலையில், வாரத்தில் குறிப்பிட்டளவு எரிபொருளையே ஒருவர் கொள்வனவு செய்ய முடியும் என்பதால், நீண்ட வரிசைகளில் காத்திருக்கும் நிலைமை கட்டுக்குள் வந்தாலும், ஏராளமான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல், டீசல் என்பன விற்பனை செய்யமுடியாமல் தேங்கியுள்ளது. இதனால், புதிதாக எரிபொருளை கொண்டுவரமுடியாது உள்ளது என்றும், இதனால் தமது வழமையான விற்பனை இலாபம் பாதிக்கப்பட்டுள்ளது எனவும் எரிபொருள் நிலைய உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

## மானிப்பாயில் வாள்வெட்டு இளைஞர் ஒருவர் படுகாயம்!

மானிப்பாய், ஓக. 16

மானிப்பாயில் இளைஞர் ஒருவர் மீது நேற்றுமுன்தினம் இரவு வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் சென்ற மூவரே வாள் வெட்டுத் தாக்குதலை நடத்தியுள்ளனர். இதில், மானிப்பாய் நகரப் பகுதியில் வர்த்தக நிலையம் ஒன்றில் பணியாற்றும் 21 வயதுடைய ஜெயக்குமார் சஜீந்திரன் என்ற இளைஞரே வாள் வெட்டுக்கு இலக்கானார். காயமடைந்த இளைஞர் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-5)

# புலம்பெயர் அமைப்புகள்மீது தடை நீக்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்பு!

கொழும்பு, ஓக. 16

**புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் சிலவற்றின் மீதும் மற்றும் தனிநபர்கள் சிலர் மீதும் விதிக்கப்பட்டிருந்த தடையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இலங்கை அரசு நீக்கியமைக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்புத் தெரிவித்துள்ளது.**

அரசு, மீண்டும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் மீது தடையை விதித்திருந்தது.

தற்போது ஆட்சிக்கு வந்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தத் தடையை நீக்கியுள்ளார். எல்லோருக்கும் இல்லாவிடினும் சில முக்கிய அமைப்புக்கள் மற்றும் முக்கிய நபர்கள் சிலர் மீதான தடையை ரணில் அரசு நீக்கியுள்ளது. இதை நாம் வரவேற்கின்றோம். சில அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் சிலர் மீதான தடை இன்னமும் தொடர்கின்றது. இதனை ரணில் அரசு கவனத்தில் எடுக்க வேண்டும்.

புலம்பெயர் தமிழர்களுடைய முதலீடுகளும், உதவிகளும் இலங்கைக்கு வர வேண்டும் என்று ரணில் அரசு எதிர்பார்க்கின்றது. ஆகவே, புலம்பெயர் தமிழ் மக்கள் மத்தியில் செல்வாக்குச் செலுத்தக் கூடியவர்கள் அல்லது அங்கு அமைப்புக்களூடாக மக்களுடன் செயற்பட்டுக் கொண்டிருப்பவர்கள் தடையில் இருந்தால் தாம் எதிர்பார்க்கும் காரியங்கள் நடக்காது என்ற காரணத்தால் இந்தத் தடையை ரணில் அரசு நீக்கியுள்ளது" - என்று தெரிவித்தார். (ஐ-2)

தொடர்ந்தும் தடையில் உள்ள ஏனைய புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்களின் பெயர்களையும் கறுப்புப்பட்டியலில் இருந்து இலங்கை அரசு நீக்க வேண்டும் என்றும் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவிக்கையில்,

"இது நல்லதொரு விடயம். அரசின் இந்த நடவடிக்கையை வரவேற்கின்றோம். பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கையின் மீள் எழுச்சிக்குப் புலம்பெயர் தமிழர்களின் பங்களிப்பு மிகவும் அத்தியாவசியம். இதனை உணர்ந்து சில புலம்பெயர் தமிழ் அமைப்புகளினதும், தனிநபர்களினதும் தடையை இலங்கை அரசு நீக்கியுள்ளது.

நாட்டின் நலன் கருதி அரசு எடுத்துள்ள இந்த நடவடிக்கையை வரவேற்கின்றோம்.

அதேவேளை, தொடர்ந்தும் தடையில் உள்ள ஏனைய புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் தொடர்பிலும் ரணில் அரசு கவனம் செலுத்த வேண்டும்.

புலம்பெயர் தமிழர்களுடன் இலங்கை அரசு நெருக்கமாகப் பேசி நாட்டுக்காக அவர்களின் உதவிகளைப் பெற வேண்டும்" - என்றார்.

இதேபோல, இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசா கூறுகையில்,

"பொதுவாக இது நல்ல செய்தி என்றுதான் நாங்கள் எண்ணுகின்றோம். பொருளாதார ரீதியாக உதவிகளைப் பெறலாம் என்ற நம்பிக்கையுடன் சில புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் சிலர் மீதான தடையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீக்கியுள்ளார் என்று நாங்கள் எண்ணலாம். ஜனாதிபதியின் இந்த நடவடிக்கையை நாங்கள் வரவேற்கின்றோம்.

தேசிய இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வை ரணில் அரசு வழங்க முன்வந்தால்தான் அவர்கள் எதிர்பார்க்கின்ற புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகளும், பொருளாதார நெருக்கடியை நிவர்த்தி செய்வதற்கான உதவிகளும் கிடைக்கும் என்று கருத வேண்டும்.

இதேவேளை, ஏனைய புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் மீது தொடரும் தடையையும் நீக்க ரணில் அரசு முன்வரவேண்டும்" - என்றார்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், "சில புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் சிலர் மீதான தடையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீக்கியுள்ளமையை வரவேற்கின்றோம்.

இன்னும் பல புலம்பெயர் தமிழ் அமைப்புகளும் தனிநபர்களின் பெயர்களும் தடை செய்யப்பட்ட பட்டியலிலேயே காணப்படுகின்றன. அந்தத் தடையையும் நீக்குமாறு நாம் ரணிலின் அரசிடம் கோருகின்றோம்.

முதலீடு செய்யத் தயாராக இருக்கும் புலம்பெயர் உறவுகள் அச்சமின்றி தங்கள் முதலீடுகளை செய்வதற்கு இந்தத் தடையை நீக்குவது அவசியமாகும். இதைக் கருத்தில் கொண்டு ஏனைய புலம்பெயர் அமைப்புகளையும் தனிநபர்களின் பெயர்களையும் தடைப் பட்டியலில் இருந்து நீக்குமாறு ஜனாதிபதியிடம் கோருகின்றோம்" - என்று கூறினார்.

புளொட் கட்சியின் தலைவரும் எம். பியுமான தர்மலிங்கம் சித்தார்த்தன், "புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் பலர் மீதான தடையை கடந்த நல்லாட்சி அரசு நீக்கியிருந்தது. பின்னர் ஆட்சிக்கு வந்த கோட்டாபய

---



# இந்தியா அளித்த விமானத்தை பொறுப்பேற்றார் ஜனாதிபதி!

கொழும்பு, ஓக. 16

இந்தியாவால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட டொனியர் (INDO-228) விமானம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நேற்று பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே விமானத்தை ஜனாதிபதியிடம் ஒப்படைத்தார்.

இதன்போது, இந்திய கடற்படையின் வைஸ் அட்மிரல் வைஸ் அட்மிரல் சதீஷ் என். குர்மேட் உட்பட உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து ஏராளமான விருந்தினர்கள் கலந்து கொண்டனர்.

இது தொடர்பாக, இந்திய உயர்ஸ்தானிகராலயம் தனது டுவிற்றர் பதிவில், மற்ற துறைகளில் இந்தியாவுடன் ஒத்துழைப்பதன் பலன்களைப் போலவே, இலங்கை விமானப் படைக்கு டொனியர் விமானம் பரிசாக வழங்கப்படுவது இலங்கையின் கடல்சார் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு முக்கியமான தெனவும், அதனை உறுதிப்படுத்துவதற்கான ஒரு படியாகும்.

இந்தியப் பெருங்கடல் மற்றும் வங்காள விரிகுடாவில் உள்ள இலங்கை போன்ற நாடுகளின் நண்பர்கள் மற்றும் அண்டை நாடுகளின் பலத்துடன் இந்தியாவின் பலம் இணைவதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு என்று கூறியுள்ளது. (ஐ)

# தபால் கட்டணம் உயர்வு நேற்று முதல் நடைமுறை

கொழும்பு, ஓக. 16

அதிகரித்த தபால் கட்டணங்கள் நேற்று திங்கட்கிழமை முதல் நடைமுறைக்கு வந்ததாக தபால் மாஅதிபர் ரஞ்சித் ஆரியரத்ன அறிவித்துள்ளார்.

இதற்கமைய, 15 ரூபாய் சாதாரண தபால் கட்டணம் 50 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. தபால் அட்டையின் விலை ரூ. 10 இலிருந்து ரூ. 20 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

தற்போது, பொதுமக்களிடையே சாதாரண தபால் பயன்பாடு குறைவடைந்துள்ளது. தபாலிடப்படும் 95 வீதத்துக்கும் அதிகமான கடிதங்கள் வர்த்தக நிறுவனங்கள் மற்றும் அரசாங்கத்தினுடையவை. இதற்கமைய, சாதாரண/ வர்த்தக நோக்கிலான கடிதங்களை கொண்டு சேர்ப்பதற்கான செலவு ரூ. 49.80ஆக கணக்கிடப்பட்டுள்ளது. இந்தச் செலவை ஈடு செய்யும் நோக்கில், சாதாரண கடிதங்களுக்கு தற்போது அறவிடப்படும் முத்திரை கட்டணத்தை ரூ. 15 இலிருந்து ரூ. 50 ஆக திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்ற சட்டத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ள இலாப நோக்கமற்ற தொண்டு ஃ சமூக சேவை நிறுவனங்களுக்கு வழங்கப்படும் அஞ்சல் கட்டணம், உச்ச பட்சம் 20 கிராம் வரையான தபாலுக்கான கட்டணம் ரூ. 12 இலிருந்து ரூ. 30 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. கொழும்பு நகரிற்குள், கொழும்பு 01 - 15 வரை விநியோகிப்பதற்காக, மத்திய தபால் பரிமாற்றகத்தால் பொறுப்பேற்கப்படும் கடிதங்களுக்கான கட்டணம், ரூ. 12 இலிருந்து ரூ. 30 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டணமானது, அதிக பட்சம் 20 கிராம் எடையுடைய, ஒரே முகவரியில் இருந்து குறைந்த பட்சம் 10,000 கடிதங்களை நபரொருவரால் தபாலிடும் கடிதங்களுக்கு பொருந்தும். காசுக்கட்டளை, அதிக பட்ச தொகை ரூ. 50,000 இலிருந்து ரூ. 100,000 காசுக் கட்டளை மூலம் அனுப்பும் அதிக பட்ச தொகை ரூ. 50,000 இலிருந்து ரூ. 100,000 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஆயினும், உப தபாலகங்களில் அதிகபட்சம் ரூ. 25,000 பணத்தையே காசுக் கட்டளையாக அனுப்ப முடியும் - என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# இந்த ஆண்டின் 4 மாதங்களில் 34 மனிதர், 47 யானைகள் பலி!

கொழும்பு, ஓக. 16

இந்த வருடத்தின் முதல் 4 மாதங்களில் மாத்திரம் காட்டு யானைகள் தாக்கி 34 பேர் மரணமாகினர். இதேநேரம் 47 யானைளும் கொல்லப்பட்டன என்று விவசாய, வனஜீவராசிகள் மற்றும் வனவள பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அமைச்சு வெளியிட்ட அறிக்கையில்,

8 மாகாணங்கள் மற்றும் 19 மாவட்டங்களில் உள்ள 131 பிரதேச செயலர் பிரிவுகளில் யானை மற்றும் மனித மோதல் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இந்த ஆண்டில் உயிரிழந்த 47 காட்டு யானைகளில், 13 யானைகள் துப்பாக்கிச்சூடு காரணமாகவும், மேலும் 17 காட்டு யானைகள் மின்சாரம் தாக்கியும் மரணித்தன.

கடந்த 3 வருடங்களில் யானை - மனித மோதல்கள் அதிகரித்து வருகின்றன. 2019ஆம் ஆண்டில் 407 யானைகள் உயிரிழந்தன. 122 பேர் உயிரிழந்தனர்.

2020 ஆம் ஆண்டில், யானை - மனித மோதலால் 112 பேர் உயிரிழந்தனர். அத்துடன் கடந்த வருடத்தில் யானை - மனித மோதலால் 142 பேர் உயிரிழந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, அநுராதபுரம் - மிகிந்தலை பகுதியில் மின்சாரம் தாக்கி நேற்றுமுன்தினம் 3 யானைகள் பலியாகின என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)



# ‘ஒன்லைன்’ மூலமாக கடலுணவை பெறலாம்!

கொழும்பு, ஓக. 16

பொது மக்கள் தமக்குத் தேவையான கடலுணவுகளை ஒன் லைன் மூலம் பெற்றுக் கொள்வதற்கான பொறிமுறை ஒன்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த சேவை இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் கொழும்பு - பம்பலப்பிட்டி மீன் விற்பனை நிலையத்தில் நேற்று சம்பிரதாய பூர்வமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்து வைத்தார்.

அதனடிப்படையில் இன்று தொடக்கம் ‘பிக் மீ’ சேவை ஊடாக இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் விற்பனை நிலையங்களில் இருந்து தேவையான கடலுணவுகளை மக்கள் பெற்றுக் கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இந்தோனேசிய உயர்ஸ்தானிகராக ஜயநாத்தை நியமிக்க அனுமதி!

கொழும்பு, ஓக. 16

இந்தோனேசியா நாட்டுக்கான உயர்ஸ்தானிகராக அட்மிரல் ஜயநாத் கொலம்பகேயை நியமிக்க பாராளுமன்ற உயர் பதவிகளுக்கான குழு அனுமதியளித்துள்ளது.



ஓய்வு பெற்ற கடற்படை தளபதியான ஜயநாத் கொலம்பகே முன்னர் வெளிவிவகார அமைச்சின் செயலாளராக பணியாற்றியவர். இவர் கடந்த மே மாதம் தனது பதவியை இராஜிநாமா செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# கொழும்பு மாநகர சபை வளவில் தோட்டப் பயிர்செய்கை ஆரம்பம்!

கொழும்பு, ஓக. 16

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் உணவு நெருக்கடிக்கு தீர்வாக, கொழும்பு மாநகர சபை வளாகத்தில் தோட்டப் பயிர்ச் செய்கையை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகர சபை மேயர் ரோஸி சேனாநாயக்கவின் பணிப்புரைக்கு அமைவாக இந்த பயிர்ச்செய்கையை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்ற வருகின்றன.

பயிர்ச்செய்கைக்காக கொழும்பு மாநகர சபை ஊழியர்களால் நிலத்தை பதப்படுத்தி பயர்ச் செய்கைக்கு தயார்ப் படுத்தும் பணிகள் தற்போது மும்முரமாக மேற்கொள்ளப் படுகின்றன.

இந்நிலையில், நாட்டு மக்கள் அனைவரும் முடிந்தளவு வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கைகளில் ஈடுபடுவதற்கு தேவையான வசதிகள் அரசாங்கத்தினால் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் பயனை மக்கள் பெற்றுக் கொள்ளும்படி பொது மக்களை அரசாங்கம் கேட்டுள்ளது. (ஐ)

# உத்தரவாதம் அளியுங்கள் நாட்டுக்கு உதவிகளைக் கொண்டு வருகிறேன்!

## மனோ கணேசன் எம். பி. உறுதி

கொழும்பு, ஓக. 16

**புலம்பெயர் அமைப்புகளை சந்தித்துப் பேச நான் தயார். அதற்கான அடிப்படையை அரசாங்கம் உருவாக்க வேண்டும். குறைந்த பட்சம் பொது கோட்பாடுகளுக்கான உத்தரவாதங்களை அரசும், எதிர் கட்சிகளும் அறிவிக்குமானால் இது சாத்தியப்படலாம் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்பி தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று நடத்திய விசேட ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

ரணில் நிர்வாகம், உலகத் தமிழர் பேரவை உள்ளிட்ட ஆறு அமைப்புகள், 316 தனி நபர்கள் மீதான தடையை நீக்கியுள்ளது. இந்நடவடிக்கையை நான் வரவேற்கிறேன். ஆனால், தடை நீக்கம் மாத்திரம் அவர்களை திருப்திப்படுத்த போவதில்லை.

இலங்கையின் 52 பில்லியன் டொலர் கடன்சுமை, நாட்டை நடத்த மாதாந்த 500 மில்லியன் டொலர் தேவை ஆகிய வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்துள்ள அனைத்து தமிழ், சிங்கள மக்களின் ஒத்துழைப்புகளை நாம் நாட வேண்டும். இதற்காக கால தாமதம் செய்யாமல், இந்நாட்டின் தேசிய ஐக்கியம் மற்றும் இனப்பிரச்னை தீர்வு தொடர்பிலும், ஊழலற்ற நிதி நிர்வாகம் தொடர்பிலும் ஒரு குறைந்தபட்ச பொது கோட்பாடுகளை இலங்கை அரசு புலம்பெயர் இலங்கையர்களை நோக்கி அரசாங்கத்தின் உத்தரவாதமாக அறிவிக்க வேண்டும்.

இந்த அடிப்படையில் தமிழ் அமைப்புகள் மட்டுமல்ல, இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்துள்ள சிங்கள மற்றும் அனைத்து மக்களின் அமைப்புகளுடனும் உரையாட நான் தயாராக இருக்கின்றேன். ஒரு பக்கம் தமிழர் என்ற முறையிலும், மறுபுறம் தெற்கில் சிங்கள மக்கள் வாழும் கொழும்பு மாவட்ட எம். பி. என்ற முறையிலும் நான் இந்த பாத்திரத்தை வகிப்பது பொருத்தமானது என நம்புகிறேன். அரசில் அமைச்சு பதவிகளை பெறுவதை விட இதுதான் பிரயோசனமானது எனவும் நான் நம்புகிறேன்.

உலகம் முழுக்க புலம்பெயர்ந்துள்ள அனைத்து தமிழ், சிங்கள இலங்கையர்கள் சுமார் 25 இலட்சம் பேர் வாழ்கிறார்கள். இவர்கள் அனைவரும் மனமுவந்து நாட்டுக்கு உதவக் கூடிய அளவில் அவர்களின் நம்பிக்கையை பெறுவது நாட்டின், நாட்டு அரசின் கடமை. இந்நாட்டில் வாழ முடியாமல், வெளிநாடுகளுக்கு போய் விட்ட இவர்களுக்கு நாடு நல்ல திசையில் மாறுகிறது என்ற நம்பிக்கை ஏற்பட வேண்டும்.

ஆனால், அவற்றுக்கு முன் நிபந்தனைகள் உண்டு. புலம்பெயர்ந்துள்ள தமிழர்கள் குறிப்பாக நாட்டின் தேசிய இனப் பிரச்னை தொடர்பில் உத்தரவாதங்களை எதிர்பார்ப்பார்கள். புலம்பெயர்ந்துள்ள சிங்கள மக்கள் குறிப்பாக தமது உதவிகள் ஊழல், வீண் விரயம் ஆகியவற்றை செய்யும் அரசியல்வாதிகளின் கைகளுக்கு போய்விடக்கூடாது தொடர்பான உத்தரவாதங்களை எதிர்பார்ப்பார்கள் - என்றார். (ஐ)

# நீதித்துறையினருடன் அரச அதிகாரிகள் கடித தொடர்புகளை தவிர்க்கவேண்டும்!

## ஜனாதிபதியின் செயலர் அறிவுறுத்து

கொழும்பு, ஓக. 16

அரச அதிகாரிகள் தரப்பினரான அமைச்சின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் பிரதம நீதியரசர் உட்பட நீதித்துறை அதிகாரிகளுடன் நேரடியான கடிதம் மூலமான தொடர்புகளை தவிர்க்க வேண்டும் என்று ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க அறிவுறுத்தியுள்ளார்.

அனைத்து அமைச்சின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களின் தலைவர்களுக்கு இன்று கடிதம் ஒன்றை அனுப்பி வைத்து இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

சட்டமா அதிபர் திணைக்களத்துடன் கையாள்வதாயின் அது ஜனாதிபதி செயலகத்தின் ஊடாகவே மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதியின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# அரசியலிலிருந்து ஒதுங்குகிறேன்!

## ஆளும் கட்சி எம். பி.

கொழும்பு, ஓக. 16

“இது எனது அரசியலின் இறுதி காலக்கட்டம். நான் இனி ஒருபோதும் தேர்தலில் போட்டியிடப்போவதில்லை”, என்று அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்தார்.

போராட்டக்காரர்கள் என்ன மாதிரியான மாற்றங்களை ஏற்படுத்தப் போகிறார்கள் என ஒதுங்கியிருந்தப் பார்க்கிறேன் என்றும் அவர் இதன்போது தெரிவித்தார். (ஐ)

# தடை நீக்கத்தை வரவேற்கிறேன்!

## சுமந்திரன் எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 16

“சில புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் பயங்கரவாதப் பட்டியலில் இருந்து இலங்கை அரசால் நீக்கப்பட்டதை நாங்கள் வரவேற்கின்றோம்” - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“பயங்கரவாதப் பட்டியலில் எஞ்சியிருக்கும் ஏனையவர்கள் கூட பயங்கரவாதத்துடன் தொடர்புடையவர்கள் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லாததுடன் மேலும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறையைப் பின்பற்றாமல் அவர்கள் அவ்வாறு பெயரிடப்பட்டுள்ளனர் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்தப் பட்டியலில் பெயரிடப்பட்டிருக்க வேண்டியவர்கள் அல்லாத அனைத்து தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் மறுமதிப்பீடு மற்றும் தடை நீக்கம் செய்யும் இந்தச் செயல்முறையை குறைந்தபட்சம் தொடருமாறு நாங்கள் அரசை வலியுறுத்துகின்றோம்” - என்றார். (ஐ)

# காபுலை தலிபான் கைப்பற்றி ஓராண்டு!

## ஆப்கானில் அமெரிக்க வீழ்ச்சியும் தலிபான்களின் கொடூர ஆட்சியும்!

- ஐங்கரன் விக்கினேஸ்வரா

ஆப்கானிஸ்தானில் போருக் காக சுமார் 60 லட்சம் கோடி ரூபாய் செலவழித்த அமெரிக்கா இராணுவம் , இறுதியில் காபுலை விட்டு முழுமையாக ஆகஸ்ட் 15, 2021 வெளியேறியது. ஆப்கானிய அப்பாவி மக்களின் தொடரும் அவலமாக, உலகம் அந்த மக்களுக்காக பரிதாபப்பட்ட நாளும் அன்று தான்.

ஆகஸ்ட் 15, 2021 அன்றுதான் தாலிபான் 20 ஆண்டுகளுக்குப் பிறகு ஆப்கானைத் தங்கள் வசம் மீண்டும் கொண்டு வந்தனர். நாட்டின் தலைநக ரான காபூல் நகரமும் அவர்கள் கையில் வீழ்ந்த நாள்!

தலிபான் ஆட்சியில் கடந்த ஓர் ஆண்டு காலமும் துயரத்தின் பிடியில் ஆப்கானிஸ்தான் மூழ்கியிருந்தது என்பதை அங்கிருந்து வரும் தகவல்களின் மூலம் அறியக் கூடியதாக உள்ளது.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கா மற்றும் நேட்டோ படைகள் வெளியேறின. அதன் பின்னர் தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றினர். இஸ்லாமியர்களின் ஷரியத் சட்டத்தின்படியே ஆட்சி என்று அறிவித்தனர்.

அதேவேளையில், கடந்த முறையைப் போல் ஆட்சி இருக்காது. பெண் கல்வி, பெண் சுதந்திரம் பேணப்படும், உலக நாடுகளுடன் நட்புறவு ஏற்படுத்தப்படும் என்று உறுதியளித்தனர். ஆனால், தலிபான்களின் ஆட்சி அவ்வாறாக நடைபெற வில்லை. அங்கு தற்போது வறுமையும், பசியும், நோயும் மட்டுமே மிஞ்சியுள்ளது.

அப்பாவி ஆப்கானிய மக்கள் எப்படியாவது தப்பித்துவிட வேண்டும் என்னும் பரிதவிப்பே இந்த அவலத்திற்கு காரணம். தாலிபான்களின் முந்தைய ஆட்சி அவ்வளவு மோசமாக இருந்தது எனபதே இத்தனைக்கும் காரணம்.

நாட்டிலிருந்து தப்பித்தால் போதும் என விமான நிலையத்தை நோக்கி மக்கள் ஓடினார்கள். உள்ளூர் பேருந்தைப் போல விமானத்தைப் பாவித்து அடித்துப் பிடித்துக்கொண்டு ஏற முற்பட்டார்கள். விமானத்தின் இறக்கைகளில் தொற்றிக்கொண்டு செல்ல முயன்ற சிலர், கீழே விழுந்து மரணித்தார்கள்.

**60 லட்சம் கோடி செலவு :**

தாலிபன்களை எதிர்கொள்ள பில்லியன் டாலர் கணக்கில் அமெரிக்கா பணத்தை வாரி இரைத்தது. ஆப்கானிஸ்தானில் அமெரிக்க துருப்புகளின் எண்ணிக்கையும் 2011ஆம் ஆண்டு அதிகபட்சமாக 1,10,000 பேரைத் தொட்டது குறிப்பிடத்தக்கது.

1996-2001 வரையிலான தலிபான்களது ஆட்சியில் நடந்த கொடூரங்கள் ஏராளம். தாங்கள் சந்தேகப்படும் நபர்களைப் பொது இடங்களில் வைத்துக் கழுத்தை அறுத்துக் கொன்றார்கள். தலையில் சுட்டுக் கொன்றார்கள். இன்னும் பல வகையில் பலரது உயிர்கள் பறிக்கப்பட்டன.

பெண்கள் பள்ளிக்குப் போகக் கூடாது. வேலைக்குப் போகக் கூடாது. வெளியில் செல்லும்போது ஆண் துணையுடன்தான் செல்ல வேண்டும் அதுவும் முழுவதும் மூடிய பர்தாவுடன் செல்ல வேண்டும்- இப்படி நிறைய கட்டுப்பாடுகளை கொடூரமாக பிறப்பித்து இருந்தார்கள்.

**தாலிபான் ஆட்சி:**

தாடி வைத்திருப்பது அவசியம் என ஆண்களுக்கும் கட்டுப்பாடுகள். இவற்றை மீறினால் தண்டனைதான். தண்டனை என்பது கொலைதான். அதோடு, கடும் பஞ்சம், பட்டினி. தவிர, பயங்கரவாதத்தின் ஒட்டுமொத்த உலைக்களமாக இருந்தது அந்நாடு.

உலகை அதிரவைத்த அமெரிக்க இரட்டைக் கோபுர தாக்குல் அந்த கால கட்டத்தில்தான் நடந்தது. அங்கிருந்த படிதான் இத்தாக்குதலைத் அல் கொய்தா அமைப்பின் தலைவர் ஒசாமா பின் லேடன் திட்டமிட்டதாக அமெரிக்கா இன்னமும் குற்றம் சாட்டுகிறது.



கிட்டத்தட்ட 300 ஆண்டுகால ஆங்கிலேயர் ஆட்சியில் கூட ஆப்கான் நாடு பிளவுப்படாமல் தான் இருந்தது. 1990 வரை அமெரிக்காவுக்கும் சோவியத் ஒன்றியத்துக்கும் இடையில் இடம்பெற்ற பனிப் போர் தான் ஆப்கான் பிரச்சனையை பூதாகரமாக்கியது.

**சோவியத் அமெரிக்க பனிப்போர்:**

ஆப்கானில் டிசம்பர் 1979 - பெப்ரவரி 1989 வரையில் சோவியத் ஒன்றியத்தின் உதவி பெற்ற ஆப்கானிஸ்தான் இடது சாரி அரசுக்கும், அமெரிக்க உதவி பெற்ற எனப்படும் ஆப்கானிய கிளர்ச்சியாளர்கள் குழுவுக்கும் இடையே ஒன்பது ஆண்டுகள் தொடர்ந்து நடைபெற்ற பனிப்போரின் விளைவே முஜாஹிதீன்கள், தாலிபான்கள் உருவாக்கமாகும்.

சோவியத் ஒன்றியம் மற்றும் அமெரிக்க அரசுக்கு இடையிலான பனிபோரின் ஒரு பகுதியாக ஆப்கானில் 1978ல் ஏற்பட்ட சவூர் புரட்சியின் முடிவில் அங்கு காபுலில் சனநாயக குடியரசு அமைக்கப்பட்டது.

இந்த அரசின் இடது சாரி கொள்கை மற்றும் சோவியத் ஒன்றியத்துடனான நெருங்கிய உறவின் காரணமாக, தீவிர அடிப்படைவாத இசுலாமிய குழுவான முஜாஹிதீன்களுக்கு அமெரிக்க அரசு ஆதரவளிக்கத் தொடங்கியது. மேலும் ஐக்கிய இராச்சியம், சவுதி அரேபியா, பாக்கித்தான், எகிப்து, சீனா ஆகிய நாடுகளும் ஆதரித் தன.

பொருளாதார பணம், ஆயுதம், போர் பயிற்சி என பல உதவிகளை இந்த நாடுகள் முஜாஹிதீகளுக்கு அளித்தன. இதனைத் தொடர்ந்து, இவர்களை ஒடுக்க உதவுமாறு ஆப்கன் சனநாயக குடியரசு கேட்டுக்கொண்டதை அடுத்து, சோவியத் ஒன்றியம் தனது 40வது படைப் பிரிவை ஆப்கானித்தானுக்கு அனுப்பி வைத்தது. இதுவே ஆப்கானில் சோவியத் போரின் ஆரம்பம் ஆகும்.

**அமெரிக்கா உருவாக்கிய முஜாஹிதீன்:**

இதன்பின்னர் 1989இல் ஆப்கானித்தானில் இருந்து சோவியத் படைகள் வெளியேற்றுவதற்காக முஜாஹிதீன்கள் என்ற தாக்குதல் படையை அமெரிக்கா உருவாக்கியது. மேலும், பிரித்தாளும் கொள்கையின் மூலம் ஆப்கானின் முஜாஹிதீன்கள், தாலிபான்கள், சமவுடைமைவாதிகள், மறுசீரமைப்பாளர்கள் போன்ற பல்வேறு குழுக்களிடையே அமெரிக்கா பிரிவினைவாதத்தையும் ஏற்படுத்தியது.

1989இல் சோவியத் படை வெளியேற்றப்பட்ட பிறகு, அமெரிக்கா தனது இருத்தலை குறைத்துக் கொண்டது. இதனையடுத்து, ஏற்பட்ட உள்நாட்டுப் பிரச்சனையை தீர்ப்பதற்காக உருவானது தான் தாலிபான் அமைப்பு.

2010 - 2012 காலத்தில், ஆப்கானிஸ்தானில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட துருப்புகளைக் கொண்டிருந்த காலத்தில், ஆண்டுக்கு 100 பில்லியன் டாலர் வரை செலவழித்தது அமெரிக்கா என தகவல்கள வெளியாகி உள்ளன.

இருபது ஆண்டுகள் அங்கே இருந்த அமெரிக்கா அந்த நாட்டுக்கு என்ன நன்மை செய்தது? எந்த தாலிபான்களை ஒடுக்க அங்கே சென்றதோ அதே தாலிபான்களிடம் நாட்டைக் கொடுத்துவிட்டுக் கிளம்பிவிட்டது என்பதே உண்மையாகும்.

வியட்நாமில் அடைந்த தோல்வி போல, ஒரு கட்டத்தில் சோர்ந்துபோய் 2021 ஆகஸ்டில் அமெரிக்கா அங்கிருந்து வெளியேறியது. இதையடுத்து 2021 ஆகஸ்ட் 15இல் தாலிபான்கள் மீண்டும் ஆப்கனைத் தங்கள் வசம் கொண்டு வந்தார்கள். செப்டம்பர் மாதம் தங்களது ஆட்சியை தலிபான்கள் அதிகாரப்பூர்வமாக நிறுவினார்கள்.

பிரதமராக முல்லா ஹசன் அகுந்த், துணைப் பிரதமர்களாக முல்லா அப்துல் கனி பரதர், முல்லா அப்துல் சலாம், பாதுகாப்புத்துறை அமைச்சராக முல்லா முகம்மது யாகூப் பதவியேற்றனர். மொத்தம் 19 பேரை உள்ளடக்கிய ஆப்கன் அரசு பதவியேற்றது.

இன்று ஆப்கானிஸ்தான் இருக்கும் நிலைக்கு அமெரிக்காவும் அதன் ஆப்கன் போரை ஆதரித்த நாடுகளும் தான் முழுமையான பொறுப்பை ஏற்க வேண்டும்.

**ஆப்கானில் தொடரும் அவலம் :**

தலிபான்கள் ஆட்சிக்கு வந்தவுடனேயே, 'கடந்த ஆட்சி போல் இருக்காது. கடும் தண்டனைகள் இருக்காது. பெண்களை அடிமைப்படுத்தும் கட்டுப்பாடுகள் இருக்காது' என ஏகப்பட்ட உறுதி மொழிகள் வழங்கப்பட்டன.

அதையெல்லாம் உள்நாட்டு மக்களோ உலக மக்களோ நம்பவில்லை. அந்த அவநம்பிக்கையத் தாலிபான்களும் காப்பாற்றினார்கள். மீண்டும் பெண்கள் மீதான அடக்குமுறைகள் நடைமுறைக்கு வந்தன. 72 கிலோ மீட்டருக்கு மேல் பயணம் செய்யும் பெண்கள் நெருங்கிய ஆண் உறவினர்களின் துணை இல்லாமல் பயணம் செய்ய அனுமதி கிடையாது என்று உத்தரவிட்டனர்.

அது மாத்திரமன்றி ஆண் துணையின்றி பெண்கள் வெளியில் தலைகாட்டவே கூடாது. அப்படிச் சென்றாலும் முகம் உள்ளிட்ட முழு உடலையும் மறைத்துச் செல்ல வேண்டும். பெண்களுக்குக் கல்வியும் பணிசெய்யும் உரிமையும் மீள மறுக்கப்பட்டன.

மனித உரிமைகள் ஆப்கன் மக்களுக்கு இல்லையா என்பது போலவும், அங்கு நடக்கும் அடக்குமுறைகளை உலகம் ஏன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது ? ஆப்கன் மக்களுக்கு விடிவு எப்போது வரும்? என்றே பலரதும் கேளவிக் குறியாக உள்ளது.

தலிபான்களின் இன்னொரு சட்டம், பெண்களை மேலும் இறுக்கி உள்ளது. விமானப் பயணத்தின் போது மட்டும் பெண்கள் தனியாக செல்லலாம் என விலக்கு கொடுத்திருந்தனர் தாலிபான்கள். இப்போது அதற்கும் தடை. இனி ஆண்களின் துணையோடுதான் பெண்களுக்கு விமானப் பயணம் என உறுதியாகச் சொல்லிவிட்டார்கள்.

**பெண்களுக்கு கல்வி தேவையில்லை:**

ஆக கொடூரமாக பெண்களுக்கு கல்வி என்பதே தேவையில்லை' என்று தாலிபான்கள் அறிவித்த போது, 13 வயதான அடீபா ஹைதரி என்ற சிறுமி கதறியது நினைவுக்கு வருகிறது. அவர், "தாலிபான் இம்முறை தங்களது மத சட்டத்தில் பல்வேறு முற்போக்கான மாற்றங்களை கொண்டு வந்திருப்பதாக கூறினார்கள்.

பெண் கல்விக்கு இம்முறை தடை இல்லை என்றார்கள். அந்த வாக்குறுதியை அவர்கள் காப்பாற்றவில்லை.

நான் மட்டுமல்ல என்னுடன் படிக்கும் சக மாணவிகளும் தாலிபான்கள் மாறிவிட்டனர் என்று நினைத்தோம். ஆனால் அவர்கள் இன்னும் திருந்தவில்லை" என்றார் அழுதபடியே.

ஆப்கனில் தாலிபான்கள் அடக்குமுறையை, உலகம் வேடிக்கை பார்த்துக் கொண்டே இருக்கிறது. இதைக் காலம் கவனித்துக்கொண்டே இருக்கிறது என்பதே கவலைக்கு உரியதாகும்.



தலிபான் ஆட்சியில் கடந்த ஓர் ஆண்டு காலமும் துயரத்தின் பிடியில் ஆப்கானிஸ்தான் மூழ்கியிருந்தது என்பதை அங்கிருந்து வரும் தகவல்களின் மூலம் அறியக் கூடியதாக உள்ளது. ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சி அமைந்து ஓர் ஆண்டு ஆன நிலையில், அந்நாட்டில் நோயும், பசியும், துயரும் மட்டுமே அதிகமாக நிறைந்துள்ளது.

# கோட்டாபயவை விரட்டியவர்களை ரணில் கலைத்துவிட்டார்!

## உணவுக் கப்பலுக்கு பதிலாக உளவுக் கப்பல்கள் பயணம்!

**பனங்காட்டான்**

உணவுக் கப்பல்களை மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்க சீனாவினதும் பாகிஸ்தானினதும் உளவுக்கப்பல்கள் இலங்கைக்குள் நுழைகின்றன. கோட்டாபய நாடோடியாக அலைய அவரை கலைத்தவர்களை ரணில் துரத்திவிட்டார். ரணிலுக்கு ஆதரவாக வாக்களித்தவர்களை இலகுவாகக் கண்டுபிடிக்க பொலிகிறாப் கருவி இருப்பது கூட்டமைப்பின் தலைமைக்குத் தெரியாதா?

இலங்கையின் கடந்த நான்கு மாதகால போராட்டம் மக்கள் வயிற்றுடன் சம்பந்தப்பட்டது. கமத்தொழில், கடற்றொழில் ஆகியவற்றுக்குத் தேவையான உரம் மற்றும் எரிபொருள் இன்மையால் இது ஆரம்பமானது.

புதிய ஜனாதிபதியின் ஆட்சியில் மக்கள் உணவுக் கப்பலை எதிர்பார்க்க, அதற்கு மாறாக உளவுக் கப்பல்கள் ஒன்றன்பின் ஒன்றாகச் செல்கின்றன. சீனாவின் ஷயுவான் வாங் - 5; உளவுக் கப்பல் அம்பாந்தோட்டை மாத்தளைத் துறைமுகத்துக்குள் புக அனுமதிக்கப்பட்டுள்ளது. சீனாவினால் கட்டமைக்கப்பட்ட ஏவுகணை தாங்கிய போர்க் கப்பல் தைமூர் 12ம் திகதி கொழும்புத் துறைமுகத்துக்குள் புகுந்துள்ளது.

இந்து சமுத்திர வல்லரசாகத் திகழும் இந்தியாவுக்கு இது சிம்மசொப்பனமாக மாறியுள்ளது. இலங்கையின் உயிர் மூச்சு இந்தியாவே என்று மோடிக்கு ரணில் மகுடம் சூட்டிய ஒரு வாரத்துக்குள் சீன- பாகிஸ்தான் உளவுக்கப்பல்கள் அங்கு செல்வது யாரை அச்சுறுத்த? இலங்கைக்கு இது புரியாவிட்டாலும் இந்தியாவுக்கு நன்கு தெரியும்.

இந்தியாவையும் சீனாவையும் இடமும் வலமுமாக வைத்து - இரண்டு பெண்டாட்டிகளுடன் குடும்பம் நடத்தலாமென நினைக்கும் இலங்கை இப்போது இரண்டுக்கும் நடுவில் நெருக்குப்படுகிறது. சிலவேளைகளில் இதுவே ரணிலுக்கு தீராத வலியாக அமையலாம்.



இவ்வாறான பிரச்சனைகளுக்கு வித்திட்ட மக்கள் எழுச்சிப் போராட்டம் காலிமுக கோட்டாகமவில் 123 நாளில் முறிக்கப்பட்டுவிட்டது. மார்ச் மாதம் 31ம் திகதி மிரிகானவில் உள்ள கோட்டாபயவின் தனிப்பட்ட இல்லத்தின் முன்னால் ஆரம்பித்த இப் போராட்டம் மே 9, யூன் 9, யூலை 9 ஆகிய திகதிகளில் முறையே மகிந்த, பசில், கோதபாய என்னும் ராஜபக்ச குடும்ப வல்லாதிக்கர்களை வெளியேற்றியது.

அதேபாணியில் ஆகஸ்ட் 9ல் ரணிலையும் வீட்டுக்கு அனுப்பலாமென கோட்டாகமவினர் முன்னெடுத்த முயற்சி பிசுபிசுத்துப்போய் படுதோல்வி கண்டது. கூடாரங்களோடு களத்திலிருந்து அகன்றுவிட்டனர் போராட்டக்காரர்கள். இது ரணிலின் 45 வருட அரசியல் அனுபவம் என்னும் சாணக்கியத்துக்குக் கிடைத்த முக்கிய வெற்றி என சர்வதேசம் பார்க்கிறது.

அதேசமயம், கோதபாய ராஜபக்ச தமது மனைவியுடன் நாடோடியாக அலைந்து திரிந்து வருவதற்கும் ரணிலின் சாமர்த்திய அரசியல் காய்நகர்த்தலே காரணமாயிற்று. ஆனால் இதனை இப்போது எவரும் வெளிப்படையாக சொல்ல மாட்டார்கள்.

முதல் மூன்று இரவுகளை மாலைதீவில் கழித்த கோட்டாபய தம்பதியர், அடுத்த 30 நாட்கள் சிங்கப்பூரில் தங்கிவிட்டு, அடுத்த 90 நாட்களுக்கு தாய்லாந்தில் தஞ்சம் பெற்றுள்ளனர். அவர் படும்பாடு அவருக்குத்தான் தெரியும்.

ராணுவ வீரனாக, முள்ளிவாய்க்கால் இனஅழிப்பின் யுத்த நாயகனாக, பாதுகாப்புச் செயலாளராக, 69 லட்சம் சிங்கள மக்களின் அபிமானம் பெற்று ஜனாதிபதியாகிய கோட்டாபயவுக்கு, நிம்மதியாகத் தங்கிட நிரந்தரமாக ஒரு நாடு இல்லை. இதனை அவரோ அவரது உடன்பிறப்புகளோ கனவிலும் எண்ணியிருக்க மாட்டார்கள்.

சிங்கள அரச பயங்கரவாதத்தால் அகதிகளாக்கப்பட்ட பத்து லட்சம் வரையான தமிழர் ஏதோ ஒரு புகலிட நாட்டில் உரிமை பெற்று வாழ்ந்து வருகிறார்கள். ஆனால் கோட்டாபய நிரந்தரமாகத் தஞ்சம் புக ஒரு நாடும் இல்லை. தமிழர்கள் அகதிகளாக வாழும் எந்தவொரு புகலிட நாட்டையும் அவர் ஒருபோதும் தமக்கான பாதுகாப்புத் தளமாக எண்ணவும் மாட்டார்.

இந்த நிலையில், அவர் மீண்டும் இலங்கை வருவார், அரசியல் தலைமையை ஏற்பார், இதோ அடுத்த மாதம் வருகிறார் என்று அவரின் தாசர்கள் தங்கள் வசதிக்காக அறிவித்துவர, அவரோ நாடு திரும்பும் மனநிலையில் இல்லை.

கோட்டாபய நியமித்த சிறைக்குற்றவாளியான ஞானசார தேரர் குழு கையளித்த ஒரு நாடு ஒரு சட்டம் அறிக்கையை ரணில் நிராகரிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார். தமிழர்கள் மீது எப்போதும் இனவெறி கக்கி வந்த தேரர், தமது இந்த அறிக்கையில் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு சிபாரிசு செய்திருந்தார்.

இந்த சிபார்சு தம்மை அரசியல் நெருக்கடிக்குள் தள்ளும் வஞ்சக நோக்கத்தோடு செய்யப்பட்டதென்பதை நன்கு அறிந்துவிட்டார் ரணில். தற்போது கோட்டாபய ஜனாதிபதியாக இருந்தால் இவ்வாறான சிபார்சை ஞானசாரதேரர் செய்திருப்பாரா என எழுப்பப்படும் கேள்வி நியாயமானது. இதுவே, ஞானசாரதேரரின் அறிக்கையை ரணில் குப்பையில் வீச எடுக்கும் முடிவுக்கு காரணம்.

காலிமுகத் திடலில் இடம்பெற்ற போராட்டத்துக்குள் திடீரென தலையைப் புகுத்தி ஆகஸ்ட் 9 போராட்டத்தை வழிப்படுத் துபவர் தாமே என முன்னாள் ராணுவத் தளபதியும், தற்போதைய பிரேமதாச அணியின் எம்.பியுமான சரத் பொன்சேகா அறிவித்து வந்தார்.

## பொய்யர்களுக்கான பொலிகிறாப் கூட்டமைப்புக்கு தெரியாதா?

இந்தப் போராட்டத்தின் வெற்றியினூடாக தனது எதிர்கால அரசியல் இலக்கை (ஜனாதிபதி பதவி) அடைய இவர் போட்ட திட்டம் தவிடுபொடியாகி விட்டது. இதனால் மீண்டும் பீல்ட் மார்க்ஷல் பட்டத்தை பறிகொடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்.

முள்ளிவாய்க்கால் யுத்த வெற்றிக்கு உரிமை கோரிய கோட்டாபயவும், சரத் பொன்சேகாவும் அவர்களது சிங்கள மக்களாலேயே இன்று நிராகரிக்கப்பட்டுவிட்டனர் என்பது இப்போது வரலாற்றுப் பதிவாகிவிட்டது. தமிழினத்தின் மீது இனஅழிப்பு மேற்கொண்ட இரண்டு யுத்த நாயகர்களுக்கும் அவர்களது சிங்கள மக்களே தண்டனை கொடுத்துவிட்டனர்.

இந்நிகழ்ச்சிகளுக்கு ஊடாக ரணில் சர்வகட்சி ஆட்சி அமைப்பு தொடர்கதையாகி வருகிறது. தமிழ் தேசிய கூட்டமைப்பு உடனடியாக இதில் இணையாது என சொல்லப்படுகிறது. அதேசமயம் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி. வினோ நோகராதலிங்கம் இது தொடர்பான மாற்றுக் கருத்தொன்றை பகிரங்கமாக அறிவித்துள்ளார். நிபந்தனைகளின் அடிப்படையில் ரணிலின் சர்வகட்சி ஆட்சிக்கு கூட்டமைப்பு தயாராக உள்ளது என்பதே இவரது அறிவிப்பு. இதுவே இதுவரை வெளியான கூட்டமைப்பு தரப் பின் அறிவிப்புகளில் கடைசியானது.

இதனைப் பார்க்கும் போது கூட்டமைப்பின் தலைமையுடனும் பேச்சாளருடனும் இடறுப்பட்டுக் கொண்டிருக்கும் பங்காளியான ரெலோ, ஏதோவொரு முடிவுக்கு வந்துவிட்டது போலவே தோற்றம் தெரிகிறது.

தமிழரசைத் தவிர்த்து வேறு நான்கு தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து ரெலோ ஜெனிவாவுக்கு சில நாட்களுக்கு முன்னர் மகஜர் ஒன்றை சமர்ப்பித்தமையையும், கூட்டமைப்புக்குள் சில கறுப்பு ஆடுகள் உள்ளன என ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் யாழ்ப்பாணக் கூட்டமொன்றில் பகிரங்கமாக அறிவித்ததையும் நோக்கின், இதன் ஆழ அகலம் புரியும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கூட்டமைப்பின் சிலர் தமக்கு ஆதரவாக வாக்களித்ததாக கூட்டமைப்பினுடனான சந்திப்பில் ரணில் அறிவித்ததால் உருவான புயல் ஓய்வதற்கு முன்னர் ரெலோவின் தனிப்போக்கு மேலும் சந்தேகக் கேள்விகளை உருவாக்கியுள்ளது. ரணிலுக்கு ஆதரவாக வாக்களித்த கூட்டமைப்பின் எம்.பிக்கள் யார்? கிழக்கிலும் வடக்கிலும் இவர்கள் இருப்பதாக சொல்லப்படுகிறது. இது தொடர்பாக தனித்தனியாக கூட்டமைப்பின் பத்து எம்.பிக்களிடமும் விளக்கம் கேட்க கூட்டமைப்பு முன்வந்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் செல்லுபடியற்ற இரண்டு வாக்குகளில் ஒன்று கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுடையது என்ற தகவல் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் உலா வருகிறது. இது அவரது இயலாமையின் காரணமாக இருக்கலாமெனவும் கூறுகிறார்கள்.

கூட்டமைப்பில் யார் யார் ரணிலுக்கு ஆதரவாக வாக்களித்தார்கள் என்பதை இலகுவாகக் கண்டுபிடிக்க ஒரு வழியுண்டு. பொலிகிறாப் (Polygraph) என்பது பொய் சொல்பவர்களைக் கண்டுபிடிக்கும் (Lies Detector) கருவி. சர்வதேச ரீதியாக இதனையே உளவு நிறுவனங்கள், புலனாய்வு அமைப்புகள் பயன்படுத்தி பொய் சொல்பவர்களை கண்டுபிடித்து வருகின்றன. இது கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்குத் தெரியாததல்ல.



ஆனால், இதனை பயன்படுத்தி பொய்யர்களைக் கண்டுபிடிக்க கூட்டமைப்புத் தலைமை முன்வராது. தற்செயலாக பொய்யர்கள் கண்டுபிடிக்கப்பட்டால் என்ன செய்வது? கட்சியை விட்டு வெளியேற்ற முடியுமா? இதுதான் சந்தர்ப்பம் என்று அவர்கள் ரணில் பக்கம் தாவ வழிவகுப்பதா? கூட்டமைப்பின் எதிர்காலம் என்னாகும்? இவைகள்தான் கூட்டமைப்பின் முன்னாலுள்ள பெரும் கேள்விகள்.

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**06) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக்கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக் குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

i) நான் ........................................ (ஆவணி, ஆவனி) மாதம் பிறந்தேன்.

ii) தேசியக்கொடியில் .................................... (வால், வாழ், வாள்) ஏந்திய சிங்கம் ஒன்று உண்டு.

ii) நாங்கள் .................................................... (சுற்றுலா, சுற்றுளா, சுற்றுழா) விற்காகக் கண்டிக்குச் சென்றோம்.

(3 புள்ளிகள்)

**07) பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.**

i) ஆற்றிலே போட்டாலும் ........................................................................

ii) ....................................................... குறுகுறுக்கும். (2 புள்ளிகள்)

**08) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.**

i) பலா கன்று போல பயிர் : ............................................................

ii) தென்னை ஓலை போல மூங்கில் : .................................................... (2 புள்ளிகள்)

**09) பின்வரும் வாக்கியத்திற்குரிய இரட்டைக்கிளவியை இட்டு பூரணப்படுத்துக.**

i) தம்பி தண்ணீரை ............................... (கட கட, மட மட) வெனக் குடித்தான்.

ii) காலையில் சூரியன் ................................. (தகதக, குளுகுளு) வென பிரகாசித்தது.

(2 புள்ளிகள்)

**10) தனிச்சொல்லை எழுதுக.**


i) வீண் செலவு செய்பவன் : ................................................................


ii) விமானத்தைச் செலுத்துபவன் : .................................................... (2 புள்ளிகள்)

**11) கீழே தரப்பட்ட ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) Bread : ............................ ii) Cloud : ............................. (2 புள்ளிகள்)

**12) தரப்பட்ட ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலே எழுதுக.**

i)  ..................................

ii)  ..................................

(2 புள்ளிகள்)

**13) பின்வரும் ஆங்கிலச் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக.**

i) do / like? / What / you : .............................................................................

ii) old / How / you? / are : ......................................................................................... (2 புள்ளிகள்)

**14) பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) ரோஹல : ..............................................................

ii) தொளஹ : .......................................................... (02 புள்ளிகள்)

**15) பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

i) சோறு சாப்பிடுங்கள் : ..........................................................................................

ii) அங்கே பாருங்கள் : .......................................................................................... (02 புள்ளிகள்)

❖ **விடை எழுதுக.**

**16)** 7 8 / 3 0 — இந்த நான்கு எண்ணட்டைகளாலும் உருவாக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக.

..............................................................

**17)** ஏழாயிரத்து முந்நூற்று ஒன்பது என்ற எண்ணை நியம முறையில் இலக்கத்தில் எழுதுக.

..................................................................................

## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 06. | 1) ஆவணி | 2) வாள் | 3) சுற்றுலா |
| 07. | 1) அளவறிந்து போடு | 2) குற்றமுள்ள நெஞ்சு | |
| 08. | 1) நாற்று | 2) தாள் | |
| 09. | 1) மடமட | 2) தக தக | |
| 10. | 1) ஊதாரி | 2) விமானி / வலவன் | |
| 11. | 1) பாண் | 2) முகில் | |
| 12. | 1) Star | 2) Table | |
| 13. | 1) What do you like? | 2) How old are you? | |
| 14. | 1) வைத்தியசாலை | 2) பன்னிரண்டு | |
| 15. | 1) பத் கன்ன | 2) எத்தன பலன்ன / எஹே பலன்ன / அத்தன பலன்ன | |
| 16. | 8 730 | 17. 7 309 | |

### கல்வி tv CHANNEL-1

**16.07.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

### கல்வி tv CHANNEL - 2

**16.07.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |





முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் நினைவாக காரைதீவு பிரதான வீதியில் அமைக்கப்பட்ட இரண்டாவது சிலை நேற்று திறந்து வைக்கப்பட்டது. இராம கிருஷ்ண மிஷனின் உதவி பொது முகாமையாளர் சுவாமி நீலமாதவானந்த ஜீ மகஹ ராஜ் சுவாமிகளின் சிலையை திறந்துவைத்தார்.

# பாவனைக்குதவாத நீர் விநியோகம் ஆயிரக்கணக்கான மக்கள் பாதிப்பு!

அக்கரைப்பற்று, ஓக.16

**அக்கரைப்பற்று பிராந்திய நீர் வழங்கல் பணிமனைக்கு உட்பட்ட அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை நீர் வழங்கல் திட்டத்திலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை மாலை முதல் நேற்று முன்தினம் மாலை வரை பாவனையாளர்களுக்கு வழங்கப்பட்ட கறை படிந்த சிவப்பு நிற குடிநீரால் ஆயிரக்கணக்கானவர்கள் பாதிக்கப்பட்டனர்.**

அம்பாறை கொண்ட வட்டுவான் நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை நீர் வழங்கல் திட்டங்களுக்கு வழங்கப்படும் குடி நீரே கறை படிந்த பாவிக்க முடியாத நீராக வழங்கப்பட்டுள்ளது.

இதனால், நீர் பாவனையாளர்கள் குடிப்பதற்கும் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முடியாமல் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்குட்பட்ட பிரதேசங்களில் தற்போது முற்று முழுதாக நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் நீரையே மக்கள் நம்பியுள்ளனர்.

இவ்வாறு இருக்கின்ற நிலையில், கடந்த இரு நாட்கள் இடம்பெற்ற இந்தச் சம்பவம் பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் உடனடியாக விசாரணை செய்வதுடன், பாதிக்கப்பட்ட தமக்கு நிவாரணம் வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பாவனையாளர்கள் கேட்டுள்ளனர். (ஐ)



# மாணவர்கள் தொழில் ஈடுபடுவது அவர்களின் உரிமையை பாதிக்கும்!

## இலங்கை அரச ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

மட்டக்களப்பு, ஓக. 16

தற்போதுள்ள சூழ்நிலையில் மாணவர்கள் தொழிலுக்கு செல்ல வேண்டும் என்ற கருத்தானது தொடர்ச்சியாக அவர்களின் கல்வி உரிமையை மறுக்கும் வகையில் எதிர்காலத்தில் அமையக்கூடிய வாய்ப்புகள் அதிகமாக இருக்கிறது என இலங்கை அரசாங்க ஆசிரியர்களின் சங்கத்தின் உபதலைவர் ஜீவராசா ருபேஷன் தெரிவித்தார்.



நேற்று மட்டு. ஊடக அமையத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அண்மையில் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார பாடசாலை மாணவர்கள் தொழிலுக்கு செல்ல முடியும் என சட்டத்தில் திருத்தங்களை கொண்டுவரப்போவதாக அறிக்கை முன்வைத்திருந்தார்.

இந்த அறிக்கையில் மாணவர்கள் தனியார் நிறுவனத்தில் 20 மணித்தியாலங்கள் வேலை செய்யலாம் என்ற விடயத்தை மாத்திரம் குறிப்பிட்டிருந்தார். எனினும் இது தொடர்பாக எவ்வித கருத்துக்களையும் முன்வைக்கவில்லை.

எமது நாட்டில் தற்போது நிலவி வரும் பொருளாதார நிலையில் நமது மாணவர்கள் தங்களுடைய குடும்ப சுமைகளை சுமக்கின்ற சூழ்நிலைக்குக் கூட தள்ளப்பட்டிருக்கிறார்கள். மாணவர்கள் தொழிலுக்கு சென்று பணத்தை தங்களுடைய கைகளில் எடுக்கின்ற போது கல்வியை விட்டு பணத்தின் பக்கம் ஈர்க் கப்பட்டு கல்வியை தொடர முடியாத அல்லது கல்வியில் இருந்து இடை விலகும் சூழ்நிலைக்கு தள்ளப்படும் வாய்ப்பு உள்ளது - என்றும் அவர் கூறினார். (ஐ)

# போதைப்பொருள் விற்றவர் காத்தான்குடியில் கைதானர்!

காத்தான்குடி, ஓக. 16

காத்தான்குடி - விக்டரி மைதானம் அருகே ஹெரோயின் போதைப் பொருளை விற்பனை செய்தவர் களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டார்.



கைதான நபரிடமிருந்து, 6 கிராமும் 690 மில்லிகிராம் ஹெரோயின் மற்றும் போதைப் பொருளை விற்பனை செய்ததில் கிடைத்த 21 ஆயிரம் ரூபாய் என்பவற்றையும் அதிரடிப் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

களுவாஞ்சிகுடி விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலையடுத்து, பொறுப்பதிகாரி ஐ. பி. தென்னக்கோன் தலைமையில் இடம்பெற்ற சோதனை நடவடிக்கையிலேயே போதை வியாபாரி கைது செய்யப்பட்டார்.

கைதான நபர் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக காத்தான்குடி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஐ)

# வீட்டின் கூரைக்குள் இருந்து இரு கைக்குண்டுகள் மீட்பு!

மட்டக்களப்பு, ஓக. 16

ஏறாவூர் பிரதேசத்தில் முன்னர் ஆயதக்குழு முகாமாக இருந்த வீடு ஒன்றின் கூரைக்குள் பதுக்கி வைக்கப்பட்டிருந்த கைக்குண்டுகள் இரண்டை, விசேட அதிரடிப்படையினர் நேற்று மீட்டு, செயலிழக்க செய்தனர்.

ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள 5ஆம் பிரிவு தொம்புதர் வீதியில் உள்ள வீடு ஒன்றின் உரிமையாளர், வெளிநாட்டில் குடும்பமாக இருந்தநிலையில் குறித்த வீட்டை 2006 ஆம் ஆண்டு ஆயுதகுழு கைப்பற்றி, முகாமாகப் பயன்படுத்தினர்.

இந்த நிலையில், வீட்டு உரிமையாளர் 2007ஆம் ஆண்டு வந்தபோது அளித்த பொலிஸ் முறைப்பாட்டையடுத்து ஆயுதக் குழு வெளியேறியது.

அந்த வீட்டில் வீட்டு உரிமையாளர் தற்போது வாழும் நிலையில் அதனை திருத்தியமைத்தபோது வீட்டின் கூரைக்குள் இரு கைக்குண்டுகள் கண்டறியப்பட்டன.

இது தொடர்பாக தாண்டியடி விசேட அதிரடிப்படை முகாமுக்கு தகவல் வழங்கப்பட்டது. நீதிமன்ற உத்தரவை பெற்று நேற்று முன்தினம் அந்தக் கைக் குண்டுகள் மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டன. (ஐ)

# டெங்கு பரவலை கட்டுப்படுத்த அக்கரைப்பறில் புகை விசிறல்!

அக்கரைப்பற்று, ஓக. 16

அக்கரைப்பற்று சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பிரதேசங்களில் டெங்கு நுளம்பு பெருகுவதை தடுக்கும் பொருட்டு புகை விசிறும் நடவடிக்கை நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

அக்கரைப்பற்று பிரதேசத்தில் இரு வார காலத்துக்குள் அதிகமான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டனர். இதையடுத்தே அந்தப் பிரதேசங்களில் கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஐ.எ ல். எம். றிபாஸின் ஆலோசனைக்கமைய, அக்கரைப்பற்று பிரதேசத்தில் டெங்கு நுளம்பு பரவலைக் கட்டுப்படுத்தும் முகமாக ஒருங்கிணைந்த பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.



இதன்படி, பாடசாலைகள், அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் மதத் தலங்கள் உட்பட டெங்கு பரவும் இடங்களாக அடையாளப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் புகை விசிறும் நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன், கிணறுகளில் டெங்கு நுளம்பின் குடம்பிகள் உருவாகாமல் தடுப்பதற்கு மருந்துகள் இடப்பட்டு வருவதாகவும், குடிநீர் கிணறுகளில் டெங்கு நுளம்பை அழிக்கும் பொருட்டு மீன் குஞ்சுகள் விடும் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், டெங்கு நுளம்பு பரவக்கூடிய வகையில் பராமரிப்பின்றி இடங்களை வைத்திருப்பவர்களுக்கு எதிராக நீதிமன்றம் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அக்கரைப் பற்று சுகாதார மருத்துவு அதிகாரி மருத்துவர் எவ். எம். ஏ. காதர் மேலும் எச்சரித்துள்ளார். (ஐ)

# வடிசாராயத்துடன் ஒருவர் மட்டக்களப்பில் கைதானார்!

மட்டக்களப்பு, ஓக. 16

மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினர் வடிசாரயத்துடன் ஒருவரைத் தாம் கைது செய்துள்ளனர் என்று தெரிவித்துள்ளனர்

வவுணதீவு - ஈச்சன்தீவு பிரதேசத்தில் மாவட்ட குற்றப்பிரிவு உபபொலிஸ் பரிசோதகர் றஜிகாந்தன் தலைமையிலான குழுவினர் 10 லீற்றர் வடிசாரயத்துடன் சந்தேகநபரை கைது செய்தனர்.

வெள்ளிக்கிழமை யூனியன் கொலனி பிரதேசத்தில் வைத்து குறித்த நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. கைதான நபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# சிரியாமீது இஸ்ரேல் ஏவுகணை தாக்குதல்!

டமஸ்கஸ், ஓக. 16

சிரியாவில் இலக்குகளை குறி வைத்து இஸ்ரேல் நேற்றுமுன்தினம் நடத்திய ஏவுகணை தாக்குதல்களில் குறைந்தது மூன்று சிரிய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 3 பேர் காயமடைந்தனர் என்று சிரிய அரச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இரவு 8:50 மணிக்கு (உள்ளூர் நேரம்) ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. தலைநகர் டமாஸ்கஸூக்கு அருகிலுள்ள கிராமப்புறங்களிலும் மற்றும் கடலோர மாகாணமான டார்டஸிலும் சில இலக்குகளை குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதாக தெரியவருகின்றது.

டமாஸ்கஸ் மீதான தாக்குதல்கள் லெபனான் தலைநகர் பெய்ரூட்டின் தென்கிழக்கு திசையில் இருந்து நடத்தப்பட்டன. அதே நேரத்தில் டார்டஸ் மீதான தாக்குதல்கள் மத்திய தரைக் கடலில் இருந்து நடத்தப்பட்டன.

இந்தத் தாக்குதல்களில் உயிரிழப்புகளுக்கு மேலதிகமாக பல சொத்துக்களுக்கும் சேதங்கள் ஏற்பட்டன என்று சிரிய இராணுவம் தெரிவித்துள்ளது.

எனினும் இந்தத் தாக்குதல் குற்றச்சாட்டுகள் குறித்து பதிலளிக்க இஸ்ரேலிய இராணுவம் மறுத்துவிட்டது.

2011 இல் சிரியாவில் உள்நாட்டு போர் ஆரம்பமானதைத் தொடர்ந்து அங்கு வான்வழி தாக்குதல்களை இஸ்ரேல் நடத்தி வருகிறது. ஈரான் ஆதரவுபடைகள் மற்றும் ஹிஸ்புல்லா போராளிகளை குறி வைத்தே இந்தத் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பெருங்கடல்களை பாதுகாப்பதற்கு கூடுகின்றனர் உலக தலைவர்கள்!

நியூயோர்க், ஓக.16

**உலகின் பெருங்கடல்களை அதிகளவான வளச் சுரண்டலில் இருந்து காப்பாற்றுவது தொடர்பில் உலக நாடுகளின் தலைவர்கள் நியூயோர்க்கில் உள்ள ஐ. நா. சபையில் கூடி விவாதிக்கவுள்ளனர்.**



பெருங்கடல் வளப் பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பில் ஐ. நாவின் தலைமையகத்தில் 10 வருடங்களாக பேச்சுகள் நடத்தப்பட்டு வருகிற போதும், இந்த ஒப்பந்தம் இதுவரை கையெழுத்திடப்படவில்லை.

இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டால் 2030ஆம் ஆண்டுக்குள் உலகின் 30 வீதமான பெருங்கடல்கள் பாதுகாக்கப்பட்ட பகுதிகளாக மாற்றப்படும். இது கடல் வாழ் உயிரினங்களை பாதுகாக்கும் என பிரசாரகர்கள் நம்புகின்றனர்.

உலகின் பெருங்கடல்களில் மூன்றில் இரண்டு பங்கு தற்போது சர்வதேச கடல்களாகக் கருதப்படுகின்றன. சர்வதேச கடற்பரப்பில் அனைத்து நாட்டவர்களும் மீன் பிடிக்கவும் , கப்பல் பயணங்களை மேற்கொள்ளவும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும் உரிமை உண்டு.

இந்நிலையில் பெருங்கடல் பாதுகாப்பு குறித்த கொள்கைத் திட்டங்கள் இல்லை. இதனால் அங்கு வாழும் கடல் வாழ் உயிரினங்கள் பருவநிலை மாற்றம், அதிகளவு மீன்பிடித்தல் மற்றும் அதிக கப்பல் போக்குவரத்து ஆகியவற்றின் அச்சுறுத்தல்களால் அழிவடையும் அபாயம் உள்ளது.

10வீதம் முதல் 15வீதமான கடல் வாழ் உயிரினங்கள் ஏற்கனவே அழியும் அபாயத்தில் இருக்கின்றன என்று இந்த ஆண்டின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்ட ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன.

கடல் பரப்பு ஆளுகை மற்றும் பாதுகாப்பு குறித்தான ஒன்றுபட்ட கொள்கைகள் இல்லாததால் கடல் சூழல் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளதாக இயற்கை வள பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியம் (IUCN) முந்தைய பேச்சுகளில் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நிலையில், பெருங்கடல் வளப் பாதுகாப்பு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டால் உலகப் பெருங்கடல் பகுதிகளை பாதுகாக்கப்பட்ட பகுதி வலைய மைபுக்குள் கொண்டு வர முடியும். சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும். மேற்பரப்பிலிருந்து 200 மீற்றர் அல்லது அதற்கும் அதிகமான ஆழத்தில் உள்ள கடல் படுகையில் இருந்து கனிமங்கள் எடுப்பது தடுக்கப்படும் என இயற்கை வள பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியம் தெரிவித்துள்ளது. (ஐ)

# மாதவிடாய் தயாரிப்புகள் ஸ்கொட்லாந்தில் இலவசம்!

எடின்பேர்க், ஓக. 16

மாதவிடாய் பொருட்கள் தேவைப்படும் அனைவருக்கும் பேரவைகள், கல்வி நிறுவனங்களில் இலவசமாக கிடைக்க ஆவன செய்ய வேண்டும் என்று ஸ்கொட்லாந்து அரசு சட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது.

உலகிலேயே முதன்முறையாக, மாதவிடாய் தயாரிப்புகள் சட் டம் ஸ்கொட்லாந்து பாராளுமன்றத்தில் கடந்த 2020 நவம்பரில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையிலேயே, பாடசாலைகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் கழிவறைகளில் சுகாதாரப் பொருட்களை இலவசமாக வைத்திருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து சமூக நீதி செயலர் ஷோனா ரொபின்சன் கூறும் போது, “அனைத்து பெண்களுக்கும் நாப்கின்கள் உட்பட மாத விடாய் பொருட்களை இலவசமாக வழங்க முடிவெடுத்திருப்பது சமத்துவம் மற்றும் கண்ணியம் ஆகிய வற்றுக்கான அடிப்படை உரிமையை நிலைநாட்டுவதாக உள்ளது. மேலும், பெண்களுக்கு இந்த பொருட்களை அணுகுவதில் உள்ள நிதி சார்ந்த தடைகளையும் இது அகற்றும்” என்றார். (ஐ)



நேற்சர் ரி. ரி. எல். அமைப்பு நடத்திய காட்டுயிர் புகைப்பட போட்டியில் “ஒரு பூனையும் அதன் பரிசும்” என்ற தலைப்பில் எடுக்கப்பட்ட கறகால் பூனை பிளமிங்கோ பறவை ஒன்றை வேட்டையாடிய இந்தப் படம் உலகின் மிகச்சிறந்த வேட்டையாடிகளின் புகைப்படமாக தெரிவானது. உலகம் முழுவதுமிருந்து 8000 போட்டியாளர்கள் பங்கேற்ற இந்தப் போட்டியில் அமெரிக்காவின் ரென்னிஸ் ஸ்டாக்ஸ்டில் முதல் பரிசைப் பெற்றார்.

# 75 ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடியது இந்தியா!

புதுடில்லி, ஓக. 16



இந்தியாவின் 75ஆவது சுதந்திர தினம் நேற்று நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது. டில்லி - செங்கோட்டையில் நடந்த பிரதான நிகழ்வில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி தேசியக் கொடியை ஏற்றினார்.

பின்னர், 4 ஹெலிகொப்டர்களில் இருந்து தேசிய கொடிக்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. முன்னதாக அவர் முப்படை வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றார். தொடர்ந்து பிரதமர் சுதந்திர தின உரையாற்றினார்.

சுதந்திர தின நிகழ்ச்சியில் இந்திய அமைச்சர்கள், எம்.பி.க்கள், முப்படைத் தளபதிகள், உயர் அதிகாரிகள் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

இவர்களுடன் விசேட விருந்தினர்களாக அழைக்கப்பட்ட பல்வேறு நாடுகளின் தூதர்கள், அமைச்சர்கள், அதிகாரிகளும் நிகழ்வுகளில் பங்கேற்றுள்ளனர். சுதந்திரன தினத்தையொட்டி டில்லி - செங்கோட்டையில் 10,000க்கும் அதிகமான பொலிஸார் பாதுகாப்பில் ஈடுபட்டனர். இதனிடையே செங்கோட்டைக்கு செல்வதற்கு முன்னதாக காந்தி நினைவிடத்தில் பிரதமர் மோடி மரியாதை செலுத்தினார். இந்திய பிரதமர் மோடி 2014ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து 9ஆவது முறையாக நேற்று சுதந்திர தின விழாவையொட்டி தேசியக் கொடி ஏற்றுவது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# எகிப்து தேவாலயத்தில் தீ; 41 பேர் பலி; 45 பேர் காயம்!

கெய்ரோ, ஓக. 16

எகிப்திய நகரமான கிசாவில் உள்ள தேவாலயம் ஒன்றில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் சிக்கி தீயில் கருகியும், குறுகிய பாதை வழியே தப்பியோடும்போது கூட்ட நெரிசலில் சிக்கியும் 41 பேர் உயிரிழந்தனர். 45 பேர் காயமடைந்தனர்.

இம்பாபா சுற்றுவட்டாரத்தில் உள்ள காப்டிக் அபுசிபின் தேவாலயத்தில் நேற்று முன்தினம் சுமார் 5,000 பேர் கூடி பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது தீ விபத்து ஏற்பட்டது. மின் கசிவே இந்த விபத்துக்கு காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

தீ பரவியதை அடுத்து தேவாலயத்தின் நுழைவாயில் ஊடாக பெரும் கூட்டத்தினர் தப்பிக்க முயன்றனர். இதனால், பெரும் நெரிசல் ஏற்பட்டு பலர் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் சிறுவர்கள் மற்றும் குழந்தைகளாவர்.

தேவாலயத்தின் மூன்றாம், நான்காம் மாடிகளில் இருந்து இறங்கும்போது பலர் நெரிசலில் சிக்கியும் கீழே விழுந்தும் உயிரிழந்தனர் - காயப்பட்டனர். உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் சிறுவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கனடா ஓப்பன் ரென்னிஸ் சம்பியனானார் சிமோனா!



றொறன்ரோ, ஓக. 16

கனடா ஓப்பன் ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் சிமோனா ஹாலேப் சம்பியன் பட் டம் வென்றார்.

கனடா ஓப்பன் சர்வதேச ரென்னிஸ் போட்டி றொறன்ரோ நகரில் நடந்து வருகிறது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்றுமுன் தினம் இரவு நடைபெற்ற இறுதிப் போட்டியில் ருமேனியாவின் சிமோனா ஹாலேப் பிரேசில் வீராங்கனை பீட்ரிஸ் ஹடாத் மையா வுடன் மோதினார்.

இந்த போட்டியில் சிமோனா ஹாலேப் 6-3 என முதல் செற்றை கைப்பற்றினார். இரண்டாவது செற்றை 6-2 என மையா கைப் பற்றினார்.

இதையடுத்து நடந்த வெற்றி யாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செற்றை ஹாலேப் 6-3 என கைப் பற்றி அசத்தினார். இறுதியில், 6-3, 2-6, 6-3 என்ற செற் கணக்கில் மையாவை வீழ்த்தி பெண்கள் ஒற்றையர் பிரிவின் சம்பியன் பட் டத்தை சிமோனா ஹாலேப் வென்றார். (ஐ)

# ஒருநாள், டெஸ்ட் போட்டிகளை அழியமல் பாதுகாக்க வேண்டும்!

புதுடில்லி, ஓக. 16

ஒருநாள், டெஸ்ட் போட்டிகள் அழியாமல் இருக்க சர்வதேச கிரிக் கெட் சபை நடவடிக்கை எடுக்க வேண்டு மென முன்னாள் இந்திய அணியின் தலைவர் கபில்தேவ் கேட்டுள்ளார்.

இருபது - 20 கிரிக்கெட் வருகை யால் ஒருநாள் மற் றும் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகள் அழிந்து வருகின்றன. சமீபத்தில் இங்கி லாந்து டெஸ்ட் அணித் தலைவர் பென் ஸ்ரோக்ஸ் ஒருநாள் போட்டி யில் இருந்து ஓய்வு பெற்றதும் குறிப்பிடத்தக்கது. தென்னா பிரிக்கா இருபது -20 லீக் 2023 ஜனவரியில் தொடங்க இருக்கிறது. யூ. ஏ. ஈ. இருபது -20 லீக் 2023 ஜனவரியில் தொடங்க இருக்கிறது. இதைக்குறித்து இந்தியாவின் முன் னாள் அணித் தலைவர் கபில் தேவ் கூறுகையில், ஒருநாள் போட்டிகள் அழிந்து வருகின்றன என்று நினைக் கிறேன். ஐசிசிக்கு மிகப்பெரிய பொறுப்பு ருக்கிறது. இப்படியே போனால் 4 வருடத்துக்கு ஒரு முறைதான் விளையாட முடியும்.

அனைவரும் இருபது - 20 கிரிக் கெட் தொடரிலே பங்கேற்பதில் குறியாக உள்ளனர். ஒருநாள், டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகள் அழியாமல் இருக்க ஐ.சி.சிதான் அதற்கு நேரம் ஒதுக்க வேண்டும். கழக கிரிக்கெட், ஐ.பி.எல்., பிக் பாஷ் எல்லாம் சரி. தற்போது தென்னாபிரிக்க லீக், யூ. ஏ. ஈ. லீக் வருகிறது. அனைத்து நாடுகளும் கழக கிரிக்கெட் விளையாடினால் 4 வருடத்துக்கு ஒருமுறை மட்டுமே வரும் உலகக் கிண்ணத்தில் மட்டுமே விளையாட முடியும் - என்றார். (ஐ)



# ஜாம்பவான்களின் கிரிக்கெட் இலங்கை அணியில் புதியவர்கள்!



கொழும்பு, ஓக. 16

இந்தியாவில் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள வீதி பாதுகாப்பு கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பங்குபற்ற வுள்ள இலங்கை ஜாம்ப வான் அணியில் பல புதிய வீரர்கள் இணைந்துள்ளனர்.

அசேல குணரட்ன, டில்ஷான் முனவீர, டில்ருவன் பெரேரா, மஹேல உடவத்த ஆகியோர் இலங்கை ஜாம்பவான் அணியில் புதிதாக இணைந்துள்ளனர்.

திலக்கரட்ன டில்ஷான் தலை மையிலான இலங்கை ஜாம்பவான் அணியின் உதவித் தலைவராக நியமிக் கப்பட்டுள்ள சனத் ஜய சூரிய அணியின் பயிற்றுநராகவும் செயல்படவுள்ளார்.

இலங்கை ஜாம்பவான் அணியில் உப்புல் தரங்க, நுவன் குலசேகர, தம்மிக பிரசாத் ஆகியோர் இந்த வருட மும் இடம்பெறவுள்ள னர்.

இவர்களைவிட அஜந்த மெண் டிஸ், மலிந்த வர்ண புர, ரசல் ஆர்னல்ட், கௌஷல்ய வீரரட்ண, சாமர கப்பு கெதர ஆகியோரும் இலங்கை ஜாம்பவான்கள் அணி யில் தொடர்ந்து இடம்பெறுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் போட்டியில், இலங்கை, இந்தியா, அவுஸ்திரேலியா, மேற்கிந்தியத் தீவுகள் தென்னா பிரிக்கா, பங்களாதேஷ், இங்கி லாந்து, நியூசிலாந்து 8 ஜாம்பவான் அணிகள் பங்கேற்கின்றன.

முதலாம் கட்டமாக லக்னோ வில் செப்ரெம்பர் 10 முதல் 15 வரை 7 போட்டிகள் நடைபெறும். இரண்டாம் கட்டமாக ஜோத்பூரில் செப்ரெம்பர் 16 முதல் 19 வரை 5 போட்டிகள் நடத்தப்படும். கட் டாக்கில் செப்ரெம்பர் 21 முதல் 25 வரை 3ஆம் கட்டமாக 6 போட்டி கள் நடத் தப்படும்.

கடைசிக் கட்டமாக ஹைதரா பாத்தில் செப்ரெம்பர் 27 முதல் ஒக்ரோபர் 2 வரை 10 போட்டிக ளும் அதனைத் தொடர்ந்து இறுதிச் சுற்றும் நடத்தப்படும். (ஐ)



# நியூசிலாந்து அணிக்கு எதிராக மேற்கிந்தியா ஆறுதல் வெற்றி!

கிங்ஸ்ரன், ஓக. 16

நியூசிலாந்துக்கு எதிரான கடைசி இருபது - 20 போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி ஆறுதல் வெற்றி பெற்றது.

மேற்கிந்தியத் தீவுகள் - நியூசிலாந்து அணிகள் மோதிய 3ஆவது மற்றும் கடைசி இருபது -20 போட்டி கிங்ஸ்டனில் நேற்று முன்தினம் நடந்தது.

முதலில் ஆடிய நியூசிலாந்து நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 145 ஓட்டங்களை எடுத்தது.

பிலிப்ஸ் அதிகபட்சமாக 26 பந்களில் 41 ஓட்டங்க ளும் ( 4 பௌண்ட்ரி, 2 சிக்ஸர்கள் ), அணித் தலைவர் வில்லியம்சன் 24 ஓட்டங்களும் ( 2 பௌண்ட்ரிகள்) எடுத்தனர்.

மேற்கிந்தியத் தீவுகளின் பந்துவீச்சில் ஒரியன் ஸ்மித் 3 விக்கெட்களும் , அகீல் ஹூசைன் 2 விக்கெட்களும் , டொமினிக் டிரேக்ஸ், ஹைடன் வால்ஷ் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினார்கள்.

146 ஓட்டங்கள் இலக்கை நோக்கி ஆடிய மேற்கிந்தி யத் தீவுகள் அணி 19 ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 150 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

புரூக்ஸ் 56 ஓட்டங்களும் (3 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸ ர்கள்), பிரண்டன் கிங் 35 பந்துகளில் 53 ஓட்டங்களும் (4 பௌண்ட்ரிகள் , 3 சிக்ஸர்கள்) போவெல் 15 பந்தில் 27 (2 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்கள் எடுத்தனர்.

முதல் 2 போட்டியிலும் தோற்று தொடரை இழந்த மேற்கிந்தியத் தீவுகளுக்கு இது ஆறுதல் வெற்றியாகும்.

3 போட்டி கொண்ட இருபது - 20 தொடரை நியூசி லாந்து 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

அடுத்து இரு அணிகளும் 3 போட்டி கொண்ட ஒரு நாள் தொடரில் மோதவுள்ளன. முதல் போட்டி நாளை பிரிட்ஜ் டவுனில் நடக்கிறது.

# பிறீமியர் லீக் உதைபந்தாட்டம் மன்செஸ்டர் யுனைற்றட் தோல்வி!



பிராங்போர்ட், ஓக. 16

இங்கிலாந்தின் பிரபல உதைபந்தாட்ட கழகமான மன்செஸ்டர் யுனைற்றட் அணியை ஜேர்மனியின் பிராங்போர்ட் அணி படுதோல்வி அடையச் செய்தது.

2022- 23 ஆம் ஆண்டுக்கான பிறீமியர் லீக் உதை பந்தாட்டப் போட்டிகள் தற்போது நடக்கின்றன.

இதில், பிராங்போர்ட் நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டியில் பிராங்போர்ட் - மன்செஸ்டர் யுனைற்றட் அணிகள் மோதின.

இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய பிராங்போர்ட் அணி முதல் பாதியில் 4 கோல்கள் அடித்து முன்னிலை பெற்றது. இந்த அணி யின் ஜோஷ் தசில்வா (10ஆவது நிமிடம் ), மதியாஸ் ஜென்சன் (18ஆவது நிமிடம் ),பென் மீ (30ஆவது நிமிடம் ), பிரையன் எம்பியூமோ (35ஆவது நிமிடம் ) கோல்கள் அடித்தனர்.

இரண்டாவது பாதியில் மன்செஸ்டர் அணி பதிலடி கொடுக்க முயற்சித்தும் அந்த அணியால் கோல் அடிக்க முடியவில்லை. இதனால் ஆட்ட நேர முடிவில் 4-0 என்ற கணக்கில் பிராங்போர்ட் அணி வெற்றி பெற்றது. (ஐ)

## தானிஷ் அலி பிணையில் செல்ல நீதிமன்று அனுமதி!

கொழும்பு, ஓக. 16

தானிஷ் அலியை பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் நந்தன அமரசிங்க உத்தரவிட்டுள்ளார்.

இதனடிப்படையில் சந்தேக நபரை 25,000 ரூபாய் காசுப் பிணையிலும், தலா 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணையிலும் செல்ல நீதிவான் அனுமதித்தார்.

பொதுச் சொத்துச் சட்டத்தின் கீழ் சந்தேக நபரை மேலும் விளக்கமறியலில் வைக்க போதிய சட்சிகள் இல்லை என்பதால் நீதிவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

(ஐ)

## கோட்டாபய சிங்கப்பூரில் தங்கிய ஹோட்டல் கட்டணம் ரூ. 6.7 கோடி!

கொழும்பு, ஓக. 16

கோட்டாபய ராஜபக்ஷ சிங்கப்பூரில் தங்கியிருந்த காலப் பகுதியில் 6. 7 கோடி ரூபாயை ஹோட்டல் கட்டணமாக செலுத்தினார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

கோட்டாபய ராஜபக்ஷவும் அவரின் மனைவி அயோமா ராஜபக்ஷவும் கடந்த 11ஆம் திகதி தாய்லாந்து செல்லும் வரை சிங்கப்பூரில் உள்ள மரினா பே சேண்ட்ஸ் ஹோட்டலில் தங்கியிருந்தனர்.

இதற்கான தங்குமிட கட்டணமான 6.7 கோடி ரூபாயை அவன்ட் கார்ட் நிறுவனத்தின் தலைவரான நிஸங்க சேனாதிபதி செலுத்தினார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், தற்போது தாய்லாந்தில் உள்ள முன்னாள் ஜனாதிபதி, அந்நாட்டிலுள்ள மத வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்வதற்கு தாய்லாந்து அரசாங்கத்திடம் அனுமதி கோரிய போதிலும், இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

## கோபா, கோப் குழுக்களின் தலைமை சஜித் கட்சிக்கு!

கொழும்பு, ஓக. 16

9ஆவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடருக்கான கோப் எனப்படும் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு மற்றும் கோபா எனப்படும் அரசாங்க கணக்குகள் பற்றிய குழு ஆகியவற்றின் தலைவர் பதவிகள் ஐக்கிய மக்கள் சக்திக்கு வழங்கப்படவுள்ளன என்று அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, கோப் குழுவின் தலைவர் பதவிக்கு பாராளுமன்ற உறுப்பினரான எரான் விக்ரமரட்ணவின் பெயரும், கோபா குழுவின் தலைவர் பதவிக்கு பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிமின் பெயரும் பரிந்துரைக்கப்பட்டு சபாநாயகருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

## புலம்பெயர் அமைப்புகள்மீதான தடை எதற்காக நீக்கப்பட்டது?

### விமல் வீரவன்ஸ எம். பி. கேள்வி

கொழும்பு, ஓக. 16

"புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீதான தடை எதற்காக நீக்கப்பட்டது. தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் என்று கூறியே இந்த அமைப்புக்கள் மீது தடை விதிக்கப்பட்டது. அதனால் தடை நீக்கப்பட்டமைக்கான தெளிவான விளக்கத்தைப் பாதுகாப்பு அமைச்சு கூற வேண்டும்."

- இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ வலியுறுத்தினார்.

6 புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீதும், தனி நபர்கள் சிலர் மீதும் விதிக்கப்பட்டிருந்த தடை அரசால் நீக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே விமல் வீரவன்ஸ மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

"6 புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள்மீதான தடை எதற்காக நீக்கப்பட்டது? தடை விதிக்கப்பட்டமைக்குக் காரணங்கள் இருந்தன அல்லவா? தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் என்று கூறியே இந்த 6 அமைப்புக்களுக்கும் தடை விதிக்கப்பட்டிருந்தது. அதனால் தடை நீக்கப்பட்டமைக்கான தெளிவான விளக்கத்தைப் பாதுகாப்பு அமைச்சு கூற வேண்டும்.

இப்போது அந்தத் தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் தணிந்துவிட்டதா? அப்படி இல்லாவிட்டால் தடை நீக்கப்பட்டமைக்கு உண்மையான காரணம் என்ன?. அதை அறிந்துகொள்வதற்கான உரிமை நாட்டு மக்களுக்கு உண்டு - என்றும் அவர் தெரிவித்தார்.

## தடம் புரண்டது "ஹ^ணு குமாரி"

கொழும்பு, ஓக. 16

காலி - பூஸா பகுதியில் நேற்றுக் காலை ஹ^ணு குமாரி ரயில் தடம் புரண்டதாக ரயில் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதனால் கடலோர ரயில் சேவை நேற்று முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக ரயில் போக்குவரத்து அத்தியட்சகர் காமினி செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

(ஐ)

# மரண அறிவித்தல்

## நமசிவாயம் ஜெகதீஸ்வரன் (ஈசன்)



**தோற்றம்**
**08 - 08 -1964**

**மறைவு**
**04 - 08 - 2022**

யாழ். சங்கானை அரசடி வீதியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Paris ஐ வசிப்பிடமாகவும், தற்போது பிரித்தானியா லண்டனை வதிவிடமாகவும் கொண்ட நமசிவாயம் ஜெகதீஸ்வரன் அவர்கள் 04.08.2022 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற நமசிவாயம், பூமணி (கனடா) தம்பதிகளின் அன்பு மகனும், யாழ். பருத்தித்துறையைச் சேர்ந்த காலஞ்சென்ற சோமசுந்தரம், தங்கேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், நிர்மலா அவர்களின் அன்புக் கணவரும், அனுஷன் அவர்களின் பாசமிகு தந்தையும், அன்னலஷ்சுமி (செல்வி - கனடா), காலஞ்சென்ற மகேஷ்வரன், ஜெயராணி (கனடா), திருமால் (லண்டன்), கெங்காதரன் (சிவா - லண்டன்), ஜெயதர்சினி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோ தரரும், உதயநேசன் (கனடா), யோகாமாலினி (பிரான்ஸ்), சுரேஸ் (கனடா), தயாளினி (லண்டன்), குமுதினி (லண்டன்), பாலேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவராஜ் - விஜயா (நியூசிலாந்து), மோகன் - திலகா (இலங்கை), அருள் - ரேவதி (இலங்கை), விமலா - சூரி (சுவிஸ்), ராஜன் (இலங்கை), காண்டிபன் (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஆரபி, ஆரிஸ், அஞ்சலன், ஆதிரா, ஆதித்தியா ஆகியோரின் அன்பு மாமனாரும், ராகுல், அஸ்வின் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், அபிநாஸ், அக்ஷயா, ஆத்விக் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், அலெக்சனா, நிரோஷ், ரிதுசன், நிந்துஷா ஆகியோரின் அன்பு மாமாவும், அர்ச்சனா, அபிநயா ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

பார்வைக்கு :
Saturday, 13 Aug 2022 4:00 PM – 8:00 PM
Om Funeral Care Ltd 445 Kenton Rd, Harrow HA3 0XY, UK.

கிரியை :
Tuesday, 16 Aug 2022 11:30 AM – 3:00 PM
Oshwal Ekta Centre 366A Stag Ln, London NW9 9AA,United Kingdom.

தகனம் :
Tuesday, 16 Aug 2022 4:00 PM – 5:00 PM
Hendon Cemetery & Crematorium Holders Hill Rd, London NW7 1NB, UK.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
**குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு :
**நிர்மலா (மனைவி)** – 00447405428872
**உதயநேசன் (மைத்துனர்)** – 0014166481394
**கெங்கன் (சிவா, சகோதரன்)** – 00447852183561
**திருமால் (திரு, சகோதரன்)** – 00447917800774
**பாலேஸ் (மைத்துனர்)** – 00447919371907
**காண்டீபன் (மைத்துனர்)** – 0094770872182

## கொரோனாவுக்கு...

தொற்று நோயாளர்களுடன் மொத்த மாகப் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 6 இலட்சத்து 68 ஆயி ரத்து 141ஆக அதிகரித்துள்ளது. (ஐ)

## பதவிக்...

ஆணையை இழந்துவிட்டது. எனவே, பாராளு மன்றம் முன்கூட்டியே கலைக் கப்பட்டு பொதுத்தேர்தல் நடத்தப்பட வேண்டும்" - என்று ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட கட்சியினரும், சிவில் அமைப்பினரும், போராட்டக்காரர்களும் வலியுறுத்தினர்.

இந்த நிலையில், தற்போது பொதுத் தேர்தல் நடத்தப்பட்டால் படுதோல்வி ஏற்படும் என்று பொதுஜன பெரமுன கருதுகிறது. இதனால், முற்கூட்டி தேர் தலை நடத்தாதிருக்க ஜனாதிபதியை அந்தக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

எனினும், இந்த ஆண்டுக்குள் உள்ளூ ராட்சி சபைத் தேர்தலையும், அடுத்த ஆண்டில் மாகாண சபைத் தேர்தலையும் நடத்துவது குறித்து ஜனாதிபதி ஆலோ சித்து வருகிறார் என்று கூறப்படுகின்றது.

## தமிழில்...

வெளிப்பாடாக சுதந்திர தினத்தில் தேசிய கீதம் தமிழிலும் பாடப்பட்டது. இதேபோன்ற முறைமை எதிர்காலத்தி லும் பின்பற்றப்பட வேண்டும் என்று நான் கூறினேன். இந்த வேண்டுகோளை அமைச்சரவை ஏகமனதாக ஏற்றுக் கொண்டது.

பன்மைத்துவம் சமத்துவம், சம உரிமைகள் போன்றவை கடந்த காலங் களில் கொள்கையளவில் மாத்திரம் இருந்தமையும் நாடு பல்வேறு நெருக்கடி களை எதிர்கொள்வதற்கு காரணமானது. எதிர்காலத்தில் இந்த நாட்டில் வாழ் கின்ற அனைத்து மக்களும் மனப்பூர்வ மாக உணர்ந்து கொள்ளும் வகையில் கொள்கை ரீதியான தீர்மானங்கள் கவ னத்தில் கொள்ளப்பட வேண்டும் - என்று அவர் செய்தியாளர்களிடம் தெரி வித்தார். (ஐ)

## இலங்கையும்...

அதிகாரிகள் கலந்து கொண்டனர். இதில், உரையாற்றியபோதே மேற் கண்டவாறு கூறிய அவர் மேலும் கூறியவை வருமாறு,

வரலாறு இந்தியாவையும் இலங்கை யையும் ஒன்று சேர்த்திருப்பதால் எதிர் காலத்திலும் தொடர்ந்து ஒன்றாக பயணிக்க வேண்டும். பிராந் தியம் மற்றும் உலக நாடுகளின் பிரச் னைகளை வெற்றிகொள்வதற்கு நாம் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

இந்து சமுத்திரத்தில் உள்ள சிறிய நாடான இலங்கை, உலக வல்லரசாக முன்னேறி வருகின்ற இந்தியாவின் வகி பாகத்தை அவதானித்துக் கொண்டி ருக்கிறது. எனவே, அவர்களுடன் புரிந்துணர்வுடன் செயல்படும் திறன் அரசாங்கத்துக்குக் காணப்படுகிறது. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடை யிலான இரு தரப்பு உறவுகளின் 75 வருட நிறைவை முன்னிட்டு இரு நாடு களுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான வாய்ப்பாக இத னைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இந்திய - இலங்கை உறவுகளுக்கு மாத்திரமன்றி பிராந்தியத்துக்கும் உலகுக்கும் பொதுவான பல பிரச்னை களை நாம் இனங்கண்டுள்ளோம். அவற்றைத் தீர்ப்பதற்கு துரிதமாக செயல்பட்டு வருகின்றோம்.

இராமாயணத்தைப் பொறுத்தவரை, அது இரு நாடுகளுக்கும் பொதுவான இலக்கிய முக்கியத்துவம் வாய்ந்த தொன்றாக இருப்பதோடு ஒரு சில சிறிய வேறுபாடுகள் மாத்திரமே உள்ளன. இந்தியா, இராமனை மாவீரனாகக் கருதும் நிலையில் , இலங்கை இராமன், இராவணன் இருவரையும் மாவீரர்க ளாகக் கருதுகிறது - என்றார். (ஐ)

# அத்தியாவசிய பொருட்களின் மொத்தவிலை குறைவடைந்தது!



கொழும்பு, ஒக. 16

உருளைக்கிழங்கு, பருப்பு, சீனி, செத் தல் மிளகாய், வெங்காயம் போன்ற இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் மொத்த விலை நேற்றும் குறைவடைந்ததாக புறக் கோட்டை மொத்த விற்பனையாளர்கள் தெரிவித்தனர்.

ஆனால், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அரிசி உள்ளிட்ட உணவுப் பொருட்களின் விலை உயர்ந்து கொண்டே செல்கிறது.

நேற்றைய தினம் இறக்குமதியான ஒரு கிலோ பருப்பின் மொத்த விலை 430 - 450 ரூபாயாகும். இறக்குமதியாகும் அரிசிகளான பொன்னி சம்பா, வெள்ளை பச்சை, சிவப்பு பச்சை போன்றவற்றின் மொத்த விலை ஒரு கிலோ 170 முதல் 190 ரூபாய் வரை உள்ளது.

இதேபோன்று, உருளைக்கிழங்கு 160 - 165 ரூபாய், பெரிய வெங்காயம் 140 - 150 ரூபாய், செத்தல் மிளகாய் ஒரு கிலோ 1,350 முதல் 1,500 ரூபாயாக நேற் றுப் பதிவானது.

இருப்பினும், புறக்கோட்டையில் உருளைக்கிழங்கு, வெங்காயம் மற்றும் காய்கறிகளின் சில்லறை விலை அதிக மாக உள்ளது. எரிபொருள் நெருக்கடி காரணமாக ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெருக்கடிகளால் பொருட்களின் விலை கள் அதிகரித்துள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்தனர். (ஐ)

## அதிகாரி கொலை; டுபாயிலிருந்து வந்தவர் கைது!

கொழும்பு, ஒக. 16

சிறைச்சாலை அதிகாரி ஒருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்ப வத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

51 வயதான குறித்த சந்தேகநபர் துப் பாக்கிச்சூடு நடத்தியதன் பின்னர் தப்பிச் சென்று டுபாயில் சில நாட்கள் தங்கி இருந்துள்ளார். இந்தநிலையில் அவர் மீள நாடு திரும்பியதை அடுத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் பலப்பிட்டி நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்னிலைப்படுத் தப்பட்டமையை அடுத்து அவரை எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப் பட்டுள்ளது.

குறித்த சிறைச்சாலை அதிகாரி அம்ப லாங்கொடைப் பகுதியில் கடந்த 3 ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார். (ஐ)

## அம்பாந்தோட்டை...

வருவதற்கான அனுமதியை அரசாங்கம் வழங்கியிருந்தது. இதைத் தொடர்ந்து எழுந்த அழுத்தங்கள் - எதிர்ப்புகளைத் தொடர்ந்து கப்பலின் வருகையை தாமதிக்குமாறும் இலங்கை அதிகாரிகள் சீனாவிடம் கோரிக்கை விடுத்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புதிய...

செயல்பாட்டாளர்களுக்கும் தடை விதிக் கப்பட்டிருந்தது.

இந்நிலையில், கடந்த வார இறுதியில் 6 புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மீது தடை நீக்கப்பட்டது. எனினும், தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழர் புனர்வாழ்வு கழகம், நாடு கடந்த தமிழீழ அரசாங்கம், தேசிய தௌஹீத் ஜவாத் உள்ளிட்ட அமைப்புகள் மீதான தடை தொடர்கி றது. இந்நிலையிலேயே இந்தப் பட்டிய லில் புதிதாக 3 அமைப்புக்கள் சேர்க்கப் பட்டுள்ளன என்று தெரிய வருகின்றது.

இதேவேளை, உலகத் தமிழர் பேரவை தடைப் பட்டியலில் இருந்து நீக்கப்பட் டமைக்கு அந்த அமைப்பு பயங்கரவாதம் தொடர்பான விடயங்களுக்கு நிதியளித் தமைக்கு எந்த ஆதாரமும் இருக்கா மையே காரணம் என்று பாதுகாப்பு அமைச்சை சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தடைப் பட்டியலானது ஒவ்வோர் ஆண்டும் மதிப்பாய்வுக்கு உட்படுத்தப் பட்டே அமைப்புகள், தனி நபர்கள் மீது தடை விதிக்கப்படும் அல்லது நீக்கப் படும். இதில் அரசியல்வாதிகள் தலை யிட முடியாது என்றும் அவர் கூறியுள் ளார். (ஐ)

## நாயை வெட்டிக் கொன்ற முதன்மை சந்தேகநபர் சரண்!

யாழ்ப்பாணம், ஒக. 16

புங்குடுதீவில் நாய் ஒன்றை கைக் கோடாரியால் வெட்டிக் கொலை செய்த முதன்மைச் சந்தேக நபர் தலை மறைவாகியிருந்த நிலையில் நேற்று ஊர் காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார்.

அவர் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 29ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார்.

அண்மையில், நாய் ஒன்றை கைக் கோடரியால் வெட்டி கொடூரமாகக் கொலை செய்யும் காட்சி சமூக ஊட கங்களில் வெளியானது. இந்தச் சம்பவம் புங்குடுதீவு 9ஆம் வட்டாரத்தில் இடம் பெற்றதாக விசாரணைகளில் தெரி விக்கப்பட்டது.

இதையடுத்து, இந்தச் சம்பவம் குறித்து புங்குடுதீவு 9ஆம் வட்டாரத்தை சேர்ந்த 21 மற்றும் 35 வயதுடைய இரு வர் இந்த மாத ஆரம்பத்தில் ஊர்கா வற்றுறை பொலிஸாரால் கைது செய்யப் பட்டனர்.

நாயை வெட்டிக் கொல்லப் பயன் படுத்திய கைக்கோடரி மற்றும் அதனை காணொலி எடுத்த அலைபேசி என்பன வும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

“போதைப்பொருளுக்கு அடிமையா னதால் ஊரில் திருட்டுகளில் ஈடுபட் டோம். எம்மைக் கண்டவுடன் நாய் குரைத்து காட்டிக்கொடுத்துவிடும். இத னால் அங்கு இடம்பெறும் திருட்டு களுடன் எமக்குத் தொடர்பு உண்டு என பொலிஸார் விசாரணைக்கு அழைப் பார்கள். அதனால்தான் அந்த நாயைக் கொலை செய்தோம்.

கைக்கோடாரியால் வெட்டி கொலை செய்தவர் அன்றைய தினம் போதையில் இருந்தார். சில நாள்களுக்கு முன்பாகவே நாயை கொலை செய்துவிட்டோம்.

அந்தக் காணொலி சகோதரனின் அலைபேசியில் இருந்தது. அந்தக் காணொலி தவறுதலாக ரிக்ரொக்கில் பதிவேற்றப்பட்டுவிட்டது” என்று காணொலியை பதிவெடுத்தவர் வாக்குமூலம் வழங்கியிருந்தார்.

சந்தேக நபர்களை சட்ட மருத்துவ ரின் முன் முற்படுத்தி அறிக்கை பெற்ற பின் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (ஐ)

## மோட்டார் சைக்கிள் சாகசம் ஒருவர் பலி; மற்றவர் காயம்!

கொழும்பு, ஒக. 16

மோட்டார் சைக்கிள் சாகசத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் விபத்துக்கு உள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று முன்தினம் மாலை பிலியந்தலையில் இடம்பெற் றது.

இதில், 19 வயதான இளைஞர் உயிரி ழந்தார். 16 வயது சிறுவன் படுகாய மடைந்து கொழும்பு தேசிய மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த இளைஞன் ஒரு இளைஞ னுடன் பொகுந்தர ஐ.சி.சி வீதியிலிருந்து ஹொரணை கொழும்பு வீதி நோக்கி அதிவேகமாக மோட்டார் சைக்கிளை செலுத்தி சென்றுள்ளார்.

மற்றைய இளைஞர் மோட்டார் சைக் கிளை ஒற்றை சக்கரத்தில் செலுத்திச் சென் றுள்ளார். இதன்போது இரண்டு மோட் டார் சைக்கிள்களும் மோதி விபத்து நேர்ந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு நண்பர்களும் வேகமாக செலுத்திச் சென்ற மோட்டார் சைக்கிள் கள் விபத்தை தொடர்ந்து சுமார் முப்பது மீற்றர் தூரம் வீதியில் இழுபட்டபடி சென்றது.

உயிரிழந்த இளைஞர் பயணித்த மோட்டார் சைக்கிள் விபத்தின் பின்னர் காணாமல் போனதாகவும் மற்றைய மோட்டார் சைக்கிள் போகுந்தரவில் உள்ள மோட்டார் சைக்கிள் திருத்தும் நிலையம் ஒன்றில் ஒப்படைக்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த இளைஞரின் சடலம் பிரேத பரிசோதனை களுபோவில போதனா மருத்துவனையில் ஒப்படைக் கப்பட்டுள்ளது. (ஐ)

## வடமராட்சியில்...

தாக்குதலுக்கு இலக்கானவருக்கு தொடர்ச்சியான அச்சுறுத்தல் இருந்து வந்துள்ளதாகவும். இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தின் பலதரப்பட்ட முறைப்பாட்டு பிரிவில் கடந்த நாட்களில் முறைப்பாடு செய்யப் பட்டதாகவும் கூறப்படுகின்றது.

இதனிடையே, நேற்று முன்தினம் காங்கேசன்துறையிலுள்ள வட பிராந்திய சிரேஷ்ட பிரதி பொலிஸ் அத்தியட்சகர் பணிமனையிலும் முறைப்பாடு செய்யப்பட்டது. இந்நிலையிலேயே இந்த வாள்வெட்டு இடம்பெற்றுள்ளது.

மக்கள் அதிகமாக நடமாடும் பருத்தித்துறை நகரின் மத்தியில் இடம் பெற்றுள்ள இந்த வாள்வெட்டு சம்பவம் அப்பகுதி மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. (ஐ-2)

## 75ஆவது...

வாசித்தார்.

இந்த நிகழ்வில் இந்தியத் துணைத் தூ தரக அதிகாரிகள், குடும்ப உறுப்பினர் கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்தியா 1947ஆம் ஆண்டு ஒகஸ்ட் 15ஆம் திகதி பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரமடைந்தது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# கிழக்கின் அநீதிகள் பற்றிய குழுவுக்கு 1,000இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள்!

திருகோணமலை, ஓக. 16

கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற அநீதிகள் பற்றிய நிபுணர்கள் குழுவுக்கு காணிப் பிரச்னை, மீள் குடியேற்றம், தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனம் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் ஆயிரத்துக்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று தெரிவித்த அந்தக் குழுவின் உறுப்பினர் பொறியியலாளர் எஸ்.மோகனராஜ், குறித்த முறைப்பாடுகள் ஒவ்வொன்று தொடர்பிலும் பிரத்தியேகமாக ஆராயப்பட்டுள்ளது குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற அநீதிகள் பற்றிய நிபுணர்கள் குழுவின் இறுதி அறிக்கை தொடர்பில் தெளிவுபடுத்தும் செய்தியாளர் மாநாடு நேற்று திங்கட்கிழமை அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம் பெற்றது.

இதன்போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கடந்த 2020 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட இக்குழுவினால் 2021 ஜனவரி 31 ஆம் திகதி வரை முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. கிழக்கு மாகாணத்தில் யுத்தத்தால் மக்கள் எதிர்கொண்ட அனைத்து வகையான பாதிப்புக்கள் குறித்த தகவல்களும் இதன் போது பெற்றுக் கொள்ளப்பட்டன.

அதற்கமைய இந்தக் குழுவுக்கு 1,390 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இவற்றில் அம்பாறை மாவட்டத்திலிருந்து 338 முறைப்பாடுகளும், மட்டக்களப்பிலிருந்து 682 முறைப்பாடுகளும், திருகோணமலை மாவட்டத்திலிருந்து 370 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன. இவ்வாறு கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளில் இடப்பிரச்னை, மீள் குடியேற்றம், தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் உள்ளிட்ட பல விடயங்கள் உள்ளடங்குகின்றன.

இவற்றில் 1,233 முறைப்பாடுகள் ஒவ்வொன்றாக பிரத்தியேகமாக பரிசீலிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 157 முறைப்பாடுகள் வேறுபட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டவையாகக் காணப்படுகின்றன. இந்தப் பிரச்னைகள் தொடர்பில் ஆழமாக மதிப்பாய்வு செய்யப்பட்டு, எம்மால் தீர்வுக்கான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அந்த பரிந்துரைகள் பிரதேச செயலகங்கள் உள்ளிட்ட உத்தியோகபூர்வ தரப்பினரால் நடைமுறைப்படுத்தப்படும்.

கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளை இனரீதியாக நோக்குமிடத்து சிங்கள மக்களிடமிருந்து 291 முறைப்பாடுகளும், தமிழ் மக்களிடமிருந்து 152 முறைப்பாடுகளும், முஸ்லிம் மக்களிடமிருந்து 863 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன. இவை தவிர, விவசாய அமைப்புக்களிடமிருந்து 39, தனியார் நிறுவனமொன்றிடமிருந்து 1, பிரதேச செயலகப்பிரிவுகளிடமிருந்து 40, வெளிநாட்டிலுள்ள நபரொருவரிடமிருந்து 1 மற்றும் ஏனையவை என ஆயிரத்துக்கும் அதிக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இவ்வாறு கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகளில் தேசிய அடையாள அட்டை குறித்தோ அல்லது தங்க நகைகள் குறித்தோ பிரத்தியேகமாக எந்தவொரு முறைப்பாடும் அளிக்கப்படவில்லை. மாறாக ஏறாவூர் பிரதேசத்தில் சகல சொத்துக்களையும் இழந்துள்ளமை தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தின்போது தமது உயிர்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அனைத்தையும் கைவிட்டுச் சென்றவர்களால் இவ்வாறான முறைப்பாடுகள் அளிக்கப்பட்டுள்ளன. இந்த பிரச்னைகளுக்கு தீர்வு வழங்குவதற்கு எம்மால் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் உரிய தரப்பினரால் நடைமுறைப்படுத்தப்படும் - என்றார். (ஐ)

# நல்லூர் கந்தசுசுவாமி ஆலய கோபுர கலச அபிஷேகம்!

யாழ்ப்பாணம், ஓக. 16

வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் கந்தசாமி ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ள குபேர திக்கு ஸ்ரீகுமார வாசல் கோபுரத்தின் கலச அபிஷேகம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இது தொடர்பில் நல்லூர் கந்தசுவாமி ஆலயம் விடுத்துள்ள அறிவித்தலில் -

"கார்திகைத் திருவிழாவன்று காலை 6 மணி முதல் சொர்ண வர்ண கலாபன பஞ்சதள அதிகம்பீர மகோன்னத குமார மகாராஜ கோபுர கலச அபிஷேகம் நடைபெற கந்தப் பெருமான் திருவருள் கைகூடியுள்ளது.

கந்தப்பெருமான் எழுந்தருளி, உள்வீதி உலா வந்து குமார வாசலைத் திறந்தும், கும்பாபிஷேகம் நடைபெற்று குமாரவெளியில் திருநடனம் புரிவார். இந்தக் கிடைத்தற்கரிய காட்சியைக் காணவிரும்பும் பக்தர்கள் - அடியவர்கள் அனைவரும் வைரவப் பெருமான் வாசல் வழியாக பழைய வாகனசாலை பாதையில் சென்று குமார வெளிப் பூந்தோட்டத்தை அடைந்து அங்கேயே கந்தன் வரக் காத்திருங்கள். பாதை சிறியதாக இருப்பதனால், அடியவர்கள் தயவுசெய்து முன்னதாகவே குமார வெளியை அடைந்து கந்தன் வரக் காத்திருங்கள். எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல், வேறொன்றறியேன் பராபரமே! "மேன்மைகொள் சைவ நீதி : விளங்குக உலகமெல்லாம்" - என்றுள்ளது. (ஐ-3)

# மாணவன் மீது அதிபர் தாக்குதல் சிறுவர் அதிகார சபை விசாரணை!

யாழ்ப்பாணம், ஓக. 16

நல்லூரில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றில் பயிலும் 14 வயது மாணவன் அதிபரால் தாக்கப்பட்டு காயமடைந்தமை தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினம் பிற்பகல் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நல்லூர் விநாயகர் வீதியைச் சேர்ந்த 14 வயது மாணவனே இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டுள்ளார்.

தான் சொன்ன வேலையை செய்யவில்லை என்று தெரிவித்தே அதிபர், மாணவனை கடுமையாகத் தாக்கினார் என்று ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்ததாகக் கூறப்பட்டது.

மாணவனுக்கு நெற்றியில் காயம் ஏற்பட்டதுடன் உடல், உள ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, பொலிஸ் புலனாய்வுப் பிரிவும் இந்தச் சம்பவம் தொடர்பில் அறிக்கையிட்டுள்ளது. (ஐ - 3)

# பாராளுமன்றத்தை உடனடியாக ஜனாதிபதி கலைக்க வேண்டும்!

## எதிர்க்கட்சி வலியுறுத்து



கொழும்பு, ஓக. 16

கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்திலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தை கலைக்க வேண்டும் என எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

தேர்தல் ஒன்றை நடத்துவதைக் காட்டிலும் எம்.பிகளுக்கு அதிகளவான சம்பளத்தை வழங்க வேண்டியுள்ளது. தேர்தல் ஒன்று நடந்தால் ஊதியத்தைப் பெறாது கடமையாற்றுவதாக அரச ஊழியர்கள் அறிவித்துள்ளனர். சர்வதேச நிறுவனங்களிடமிருந்து தேர்தலுக்காக நிதி உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

எனவே, கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்திலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தைக் கலைக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (ஐ)

# பலரையும் வியக்கவைத்த பூப்புனித நீராட்டு வைபவம்!

யாழ்ப்பாணம், ஓக. 16

யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற பூப்புனித நீராட்டு விழாவொன்று பலரையும் வியக்க வைத்துள்ளது.

யாழ்ப்பாணம் - காங்கேசன் துறை வீதியில் பூநாறி மரத்தடியில் உள்ள தனியார் மண்டபம் ஒன்றில் இந்தப் பூப்புனித நீராட்டு விழா இடம்பெற ஏற்பாடாகியிருந்தது.

இதற்காக வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவில் பகுதியில் இருந்து நிகழ்வு நடைபெறும் மண்டபம் வரை காங்கேசன்துறை வீதி வழி யாக குதிரை வண்டியில் பெண் செல்ல அந்த வண்டியின் முன்பாக யானை, கதகளி, மேளதாள வாத்தி யங்கள், சகிதம் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார்.

தென் பகுதியில் இருந்து யானை மற்றும் கதகளி கலைஞர்கள் கொண்டுவரப்பட்டு இந்நிகழ்வு இடம்பெற்றது. இந்த ஊர்வலத்தை காண்பதற்காக பெருமளவு மக்கள் ஒன்றுகூடினர். (ஐ-3)









# காணாமல்போன இளைஞர் ஓடையிலிருந்து சடலமாக மீட்பு!

நுவரெலியா, ஓக. 16

நுவரெலியாவில் கடந்த 3 ஆம் திகதி அன்று காணாமல் போன 20 வயது தமிழ் இளைஞன் நேற்று காலை நுவரெலியா சமுர்த்தி வங்கிக்கு அருகாமையில் உள்ள ஓடையில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

நுவரெலியா பம்பரக்கலை தோட்டத்தில் வசிக்கும் 20 வயதான சுந்தரலிங்கம் சசிதரன் என்ற இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞரை காணவில்லை என்று அவரின் பெற்றோர் பொலிஸில் கடந்த 6 ஆம் திகதி முறைப்பாடு செய்திருந்தனர்.

விறகு எடுப்பதற்காக சென்ற இளைஞரே இவ்வாறு காணாமல் போயிருந்தார். அவர் ஆற்றை கடக்க முற்பட்டபோது தவறிவீழ்ந்து நீரில் அடித்து செல்லப்படும் காட்சி அப்பகுதியில் உள்ள வீடு ஒன்றின் சி. சி. ரீ. வி. கமெராவில் பதிவாகியிருந்தது.

இதை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்ட விசாரணையில் ஓடையில் அவரின் சடலம் மீட்கப்பட்டது. மரண விசாரணைகளின் பின்னர் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.08.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



06.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துணையாளர் யாழ் பாவாணன்



7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர்-மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை

**பகல்**

1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் - ஆஹா கல்யாணம், மான் கராத்தே
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா
6.30 மணி : மூவி டோக்கீஸ் - வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்

**இரவு**

7.00 மணி : கதை நேரம் - நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை - இலக்கிய நிகழ்ச்சி
10.00 மணி : BLACK AND WHITE

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு